# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 28 வியாழக்கிழமை (12-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:197


### இளைஞர் சயனைட் அருந்திய சம்பவம்:

## திரையரங்கு ஊழியர்கள் உட்பட ஒன்பது பேர் கொழும்பில் கைது!

கொழும்பு,ஜூன்12

வெள்ளவத்தையில் பொலீஸார் சோதனையிட முயன்றபோது இளைஞர் ஒருவர் சயனைட் உட்கொண்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக கொழும்பில் பிரபல திரையரங்கு ஊழியர்கள் உட்பட 9பேர் இரகசியப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் மூவர் பெண்களாவர். சயனைட் உட்கொண்டார் எனக் கூறப்படும் இளைஞன் தங்கியிருந்த கொட்டாஞ்சேனை வீட்டிலும் பொலீஸார் சோதனை நடத்தியுள்ளனர்.

கொழும்பில் பிரபல திரையரங்கு ஒன்றில் பல வருடங்களாகக் கடமையாற்றி வந்த புலி உறுப்பினர் ஒருவரையே தாம் வெள்ளவத்தையில் கைதுசெய்திருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இது பற்றிப் பொலீஸ் தரப்பில் கூறப்பட்டதாவது:-

மட்டக்களப்பைச் சேர்ந்த இந்த இரு இளைஞர்களும் கொழும்பில் நீண்டகாலமாக வசித்து வருபவர்கள்.

அண்மைக்காலங்களில் கொழும்பில் இடம்பெற்ற இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களின் கொலைச் சூத்திரதாரிகள் இவர்கள் எனவும் விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் வெள்ளவத்தைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## காரை வழிமறித்த கும்பல் குடும்பஸ்தரைக் கடத்தியது!

### திக்கம் பகுதியில் செவ்வாய் இரவு சம்பவம்

கரவெட்டி,ஜூன்12

வடமராட்சி இன்பருட்டி பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் திக்கம் பகுதியில் வைத்து இனந்தெரியாதோரால் வான் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்.

பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து இன்பருட்டியில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான தம்பித்துரை குலசிங்கம் (வயது 50) என்பவரே கடத்தப்பட்டார் என்று அவரது உறவினர்கள் முறையிட்டிருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் பிரஸ்தாப குடும்பஸ்தர் தனது மனைவி மற்றும் இரு மகன்கள் சகிதம் நெல்லியடியில் இருந்து திக்கம் வீதியூடாக தனது காரில் சென்றுகொண்டிருந்தவேளை திக்கம் வடிசாலைக்குச் சமீபமாக வீதியோரப் பற்றைக்குள் வான் ஒன்றுடன் மறைந்திருந்த சிலர் காரை வழிமறித்து பொல்லுகள், கம்பிகளால் கடுமையாகத் தாக்கினர் என்றும் -

பின்னர் பிரஸ்தாப குடும்பஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

### டோக்கியோ மாநாட்டில் பிரதமர் வெளியிட்ட

# தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு விடுதலைப் புலிகளால் நிராகரிப்பு

### பேச்சுக்களில் பங்குபற்ற இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வேண்டும் என்று கிளிநொச்சி தலைமையகத்திலிருந்து உத்தியோகபூர்வ அறிக்கை

கொழும்பு,ஜூன்12

**டோக்கியோ மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று விடுதலைப் புலிகள் முற்றாக நிராகரித்துள்ளனர்.**

**தாங்கள் முன்னர் கூறியபடி வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான தெளிவான வரைபை அரசு முன்வைக்கும் பட்சத்திலேயே தாங்கள் பேச்சுக்களில் கலந்துகொள்வார்கள் என்று புலிகள் தெரிவித்திருக்கிறார்கள்.**

**இதுபற்றி உத்தியோகபூர்வ அறிக்கையை கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமையகம் நேற்று வெளியிட்டது.**

"பிரதமரின் அறிக்கை எதையும் புதிதாகத் தரவில்லை. இது ஏமாற்றத்தை அளிக்கிறது. பிரதமர் குறிப்பிட்டுள்ள தற்காலிக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு (Provisional Administrative structure) என்பதும் புதியதல்ல. அபிவிருத்திக்காக அவர் முன்னர் அறிவித்த வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டதும் பற்றாக்குறையானதுமான உயர்சபை (Apex Council)தான் அது. அதற்குப் புதிய பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான்" என்று புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புதுமையானதும் வலுவானதுமான அரசியல் நிர்வாகக் கட்டமைப்பையே நாம் கேட்டோம். அதற்குப் பிரதமரிடமிருந்து சரியான பிரதிபலிப்புக் கிடைக்கவில்லை. நாங்கள் கேட்டது ஒன்று, பிரதமர் உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டில் அறிவித்தது இன்னொன்று. இரண்டுக்கும் எவ்வளவோ வித்தியாசம்.

வடக்கு - கிழக்கிற்கு புலிகளின் அதிக பங்களிப்புடன் கூடிய இடைக்கால நிர்வாக அமைப்பை அதாவது, அரசியல் நிர்வாக அமைப்பே வேண்டும் என்று நாம் கூறினோம். ஆனால், இலங்கை அரசோ பிரதேச அபிவிருத்திக்கான கூட்டமைப்பையே தர முன்வந்தது. நாட்டின் சட்டதிட்டங்களையும் அரசமைப்பையும் காட்டிப் பிரதமர் தப்பிக்கொள்ளப் பார்க்கிறார். அரசமைப்பும் சட்ட திட்டங்களும் இனவாதத்துக்கும் வகுப்பு வாதத்துக்கும் தமக்குள் நிரந்தரத்துவம் கொடுத்து வைத்திருக்கின்றன. அதைத்தான் தமிழ் மக்கள் நெடுங்காலமாக எதிர்த்துப் போராடி வருகிறார்கள்.

மேலும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு எந்த விதத்தில் இறுதி அரசியல் தீர்வு காணலாம் என்பதில் விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கும் இடையில் பெரும் கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. அரசமைப்பில் ஆங்காங்கே சிற்சில திருத்தங்களைச் செய்யலாம் என்று பிரதமர் கருதுகின்றார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### டாக்டர்கள் வேலைநிறுத்தம் நீடிப்பு

## இரண்டாவது நாளாக நேற்றும் மருத்துவ சேவைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்12

இரண்டாவது நாளாகவும் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக நேற்றும் மருத்துவ சேவைகள் பாதிப்படைந்தன.

நாடு முழுவதும் உள்ள டாக்டர்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர்களும் நேற்றுமுன்தினம் முதல் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளமை தெரிந்ததே.

நேற்றும் தமது போராட்டத்தை மருத்துவர்கள் தொடர்ந்தமையால் அவசர சிகிச்சைப் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பிரிவுகள் நேற்றும் செயலிழந்தன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## டாக்டர்களின் கோரிக்கை ஏற்பு: ஆனால் நிதி ஒதுக்குவது தாமதம்

### சுகாதார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,ஜூன்12

மருத்துவர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கும் யோசனைகள் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், அதற்குத் தேவையான நிதியை உடனடியாக விடுவிக்கமுடியாமல் இருக்கின்றது - இவ்வாறு தெரிவித்திருக்கிறார் சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன.

அரச மருத்துவர்கள் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## டோக்கியோ பிரகடனம் 'பக்ஸ்' மூலம் புலிகளின் தலைமையகத்துக்கு அனுப்பிவைப்பு

### ஜப்பான் தூதுவர் எந்தநேரமும் கிளிநொச்சி செல்லலாம்

டோக்கியோ,ஜூன்12

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர், டோக்கியோ பிரகடனத்தின் பிரதியை கிளிநொச்சியிலுள்ள புலிகளின் தலைமையகத்துக்கு 'பக்ஸ்' மூலம் அனுப்பியுள்ளார். டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றிவிட்டு கொழும்பு திரும்பிய தூதுவர், புலிகளின் கிளிநொச்சி அலுவலகத்துடன் தொடர்பு வைத்திருக்கிறார். எந்தநேரமும் அவர் கிளிநொச்சி செல்லக்கூடும். டோக்கியோ கூட்ட முடிவுகளை அவர் புலிகளின் தலைவர்களுக்கு எடுத்து விளக்குவார்.

இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக் காலை இலங்கைப் பத்திரிகையாளர்களுடன் அவர் உரையாடினார்.

அப்பொழுது அவர் மேலும் கூறியதாவது:-

"புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் தற்போது இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இயன்ற விரைவில் அவரைச் சந்திக்க ஆவலாயுள்ளேன். அவர் லண்டன் வந்துசேர்ந்ததும் லண்டனுக்குச் சென்று அவரை நேரில் சந்திப்பேன். உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோக் கூட்டத்தின் பெறுபேறுகளையும் அங்கு வெளியிடப்பட்ட 'டோக்கியோப் பிரகடனத்தின்' விவரத்தையும் நான் அவருக்கு தெரிவிப்பேன்.

"சமாதானப் பேச்சு மேசைக்கு புலிகள் விரைவில் திரும்புவார்கள் என

(14ஆம் பக்கம் பார்க்க)

### பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டு

## உரும்பிராய் சிறுவர் இல்லத்தில் காவலாளி பொலீஸாரால் கைது!

யாழ்ப்பாணம்,ஜூன்12

உரும்பிராய் வடக்குப் பகுதியில் இயங்கிவரும் சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றின் காவலாளி பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அந்த சிறுவர் இல்லத்தில் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே சந்தேகத்தின் பேரில் இவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

கைதுசெய்யப்பட்ட காவலாளியை கோப்பாய்ப் பொலீஸார் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்தனர். சந்தேக நபரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஜப்பானுடன் பொருளாதாரக் கூட்டை ஏற்படுத்தும் சாத்தியம் பற்றி ஆராய்கிறோம்

## இலங்கை வர்த்தக வாய்ப்பு கருத்தரங்கில் பிரதமர்

டோக்கியோ,ஜூன்12

ஒரு கட்டமைப்பு அடிப்படையில் ஜப்பானுடன் நெருக்கமான பலமுக பொருளாதாரக் கூட்டை ஏற்படுத்தும் சாத்தியங்கள் குறித்து நாம் ஆராய்ந்து வருகின்றோம். ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் கவாகுச்சியுடன் நான் நடத்திய பேச்சுக்களின்படி அவ்வாறான ஒரு கட்டமைப்பு குறித்து ஜப்பானிய வெளிவிவகார அலுவலகத்தில பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு எனது வெளிவிவகார அலுவலகத் தைப் பணித்திருக்கின்றேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை டோக்கியோவில் உள்ள ஜே.பி.ஐ.சி. கேட்போர் கூடத்தில் இலங்கை வர்த்தக வாய்ப்புக்கள் பற்றிய கருத்தரங்கில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார். பிரதமர் ஜப்பானில் இருந்து புறப்படுவதற்குமுன் இந்த உரையை ஆற்றினார். இலங்கையின் வர்த்தகப் பிரமுகர்கள் பலரும் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

பிரதமர் அங்கு மேலும் உரையாற்றியதாவது:-

இலங்கையின் சமூக - பொருளாதார மீட்சிக்கு தனியார்துறை முக்கிய பங்குவகிக்கிறது. உடனடி நிவாரண, புனரமைப்புக்கான நிதியை அரசதுறை வழங்கவேண்டும். ஆயினும், அவசர மீள்குடியமர்வு சீர்திருத்தங்களுக்கு அப்பால் நிலைத்து நிற்கும் மீட்சியும் மீள்நிர்மாணமும் தனியார் துறையினர் மேற்கொள்பவையாகும்.

எமது தேசிய பொருளாதாரத்தை நாம் எங்கு இட்டுச் செல்லப்போகிறோம். எமது கேந்திர திட்டத்தின் சிறப்பான அம்சங்கள் எவை?

பிரதான வர்த்தகப் பங்காளிகளுடன் - முதலாவது, இந்தியாவுடன் பொருளாதார உடன்படிக்கைகள் அல்லது சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் செய்துகொள்வது ஒரு முக்கிய குறிக்கோளாகும். அமெரிக்காவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்வது குறித்தும் நாம் பேச்சு நடத்திவருகிறோம். இந்தப் பரஸ்பர பாலங்கள் எமது சந்தைகளை இரு திசைகளில் திறந்துவிடும்.

இலங்கைக்குப் பலமான வெளிநாட்டுப் பங்காளி இல்லை என்பதால் இந்த நோக்கை ஜப்பானுக்கு எடுத்து வருவதில் மகிழ்ச்சி அடைகிறேன். எமது சர்வதேச விமான நிலையத்தின் தரத்தை ஜப்பானிய கொந்தாரத்துக்காரர்கள் உயர்த்தி வருகின்றனர். கொழும்பு - மாத்தறை நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதில் விரைவில் உதவுவர்.

ஜப்பானிடமும் ஏனைய உலகதர நிறுவனங்களிடமும் இருந்தும் உயர் ரக தனியார் நேரடி முதலீட்டை ஈர்க்க வேண்டுமேயானால் போட்டாபோட்டி முதலீட்டுச் சூழ்நிலையை நாம் வழங்கவேண்டும் என்பதை எனது அரசு நன்குணர்ந்திருக்கிறது. பொறுப்புவாய்ந்த தனியார் முதலீட்டை கவர்ந்திழுப்பது எனதும் எனது அரசினதும் பொறுப்பாகும் - இவ்வாறு பிரதமர் கூறினார்.

(எ)

# மட்டு.-அம்பாறை மாவட்டங்களில் இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு

கொக்கட்டிச்சோலை,ஜூன்12

மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட 'மக்கள் பெருமன்றம்' என்ற ஓர் அமைப்பு துண்டுப்பிரசுரமொன்றில் கோரிக்கை விடுத்திருக்கிறது.

பாடசாலைகளைப் பகிஷ்கரித்து வர்த்தக நிலையங்களை மூடி போக்குவரத்தை நிறுத்தி ஹர்த்தால் அனுஷ்டிக்கவேண்டும் என்று துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

படையினரின் கெடுபிடி நடவடிக்கைகளை நிறுத்துமாறும் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுதலை செய்யுமாறும் கோரியே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவேண்டும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

அரசியல் பணிகளில் ஈடுபடும் விடுதலைப் புலிகள் கைது செய்யப்படுவதும் சோதனைச்சாவடிகளில் மக்களை சோதனையிடுவதும் மக்கள் தாககப்படுவதும் கைது செய்யப்படுவதும் தொடர்ந்து வருகிறது என்றும் துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

(எ)

# படையை வெளியேறக் கோருகிறார் மன்னார் மறைமாவட்ட ஆயர் ஜோசப்

கொழும்பு,ஜூன்12

மக்கள் 20 ஆண்டுகளாக அனுபவித்துவந்த துன்பங்கள் நீங்கி அவர்களின் இயல்பான வாழ்க்கைக்கு வழி செய்யப்படவேண்டுமென மன்னார் மாவட்ட ஆயர் வண. இராயப்பு ஜோசப் கோரியிருக்கிறார். இதற்காகப் படையினர் தற்பொழுது நிலைகொண்டிருக்கும் பொதுக் கட்டடங்கள், தனியார் வீடுகள் ஆகியவற்றிலிருந்து வெளியேறவேண்டுமென அவர் வலியுறுத்துகிறார்.

மன்னார் உயர் பாதுகாப்பு வலயங்கள், மீள்குடியேற்றம் ஆகியவை குறித்து உண்மையைக் கண்டறியும் குழுவினர், நேற்றுமுன்தினம் ஆயரைச் சந்தித்தபோதே ஆயர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார். இக்குழுவில் இராணுவ உயர் அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழும் மக்கள் சந்தோஷமாக வாழுகின்றனர். அதனால், வடக்கு-கிழக்கு மக்கள் இயல்பான வாழ்க்கைக்கு நீண்டகாலம் காத்திருக்கமுடியாது. எனவே, மன்னார் மாவட்டத்தில் மக்களின் வீடுகள், ஆலயங்கள், பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றில் தங்கியிருக்கும் படையினர் அவற்றிலிருந்து வெளியேறவேண்டும் என்று ஆயர் அக்குழுவினரிடம் தெரிவித்தார்.

அகதிகளாக இந்தியாவுக்குச் சென்ற பெருந்தொகையான மக்கள் இப்பொழுது மன்னாருக்குத் திரும்பிக் கொண்டிருப்பதால் படையினரின் வெளியேற்றம் அவசரமாக மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் ஆயர் சொன்னார்.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட மன்னார் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர் சபூர்தீன், உயிலங்குளத்துச் சந்தியிலுள்ள பள்ளிவாசல் காணியிலிருந்தும் படையினர் வெளியேறவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே, மன்னார், மாவட்ட அரசாங்க அதிபர், படையினர் நிலைகொண்டிருக்கும் இடங்கள் பற்றிய விவரங்களை வெளியிட்டிருக்கிறார்.

இதன்படி, மன்னாரின் 22 பொதுக் கட்டடங்கள், நான்கு தனியார் தென்னந்தோட்டங்கள், ஓர் இந்து ஆலயம், ஒரு கத்தோலிக்க ஆலயம், 55 தனியார் வீடுகள் என்பனவற்றில் பொலீஸார் நிலைகொண்டிருக்கின்றனர்.

17 பொதுக் கட்டடங்கள், 57 தனியார் வீடுகள், இரண்டு கோயில்கள், இரண்டு பாடசாலைகள் என்பனவற்றில் இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கின்றனர்.

8 . அரசாங்கக் கட்டடங்களிலும், ஒரு பனை வளவிலும், 47 தனியார் வீடுகளிலும், ஒரு தென்னந்தோட்டத்திலும் கடற்படையினர் நிலைகொண்டிருக்கின்றனர்.

(ஐ)



மக்கள் வங்கியின் 'வனிதா வாசனா' அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் அண்மையில் பரிசுபெற்ற வாடிக்கையாளருக்கு வங்கியின் பருத்தித்துறை இணை முகாமையாளர் திருமதி சீ.ஆதவன் பரிசில் வழங்குகிறார். அருகில் வங்கி ஊழியர்களும் காணப்படுகின்றனர்.

*(படம்: கரவெட்டி செய்தியாளர்)*

# ஏறாவூரில் கடத்தப்பட்ட பொலீஸாரை விடுவிப்பது குறித்து புலிகளுடன் பேச்சு

## கண்காணிப்புக் குழு நடத்துகிறது

கொழும்பு,ஜூன்12

ஏறாவூரில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை கடத்திச் செல்லப்பட்ட இரு பொலீஸ்காரர்களை விடுவிப்பது குறித்து விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் பேச்சு நடத்தி வருகின்றனர்.

பேச்சு நடத்தப்படுகின்ற போதிலும் திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான அக்னஸ் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் இரவு வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த ஏ.ஜி. சேனாதீர, டி.எஸ்.நிஹால் என்னும் இரு பொலீஸாரே கடத்திச் செல்லப்பட்டனர்.

இவ்விரு பொலீஸாரும் விடுதலை செய்யப்படுவதற்கு முன் பொலீஸ் காவலில் இருக்கும் புலி உறுப்பினர் ஒருவர் விடுதலை செய்யப்படவேண்டும் என்று விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு கண்காணிப்புக் குழு அலுவலகத்திடம் அறிவித்திருக்கின்றனர் என அறியப்படுகின்றது.

புதூர் பகுதியில் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சத்தியராஜ் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டிருப்பது தெரிந்ததே. இதேவேளை, கடத்தல் சம்பவம் இடம்பெற்றதை அடுத்து அங்கு பதற்றம் நிலவியதால் இராணுவத்தினரும் பொலீஸாரும் பாதுகாப்புக் கடமைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வந்துகொண்டிருந்த பஸ்ஸை மறித்து சோதனையிட முயன்றபோது அது நிலை தடுமாறி சோதனையிட நின்றுகொண்டிருந்தவர்களுடன் விபத்துக்குள்ளானது.

இதில் ஒரு பொலீஸ் சார்ஜன்ட் கொல்லப்பட்டார். இரண்டு பொலீஸாரும் ஒரு சிப்பாயும் காயமடைந்தனர்.

விபத்துக்குள்ளான பஸ்ஸின் சாரதி முனுசாமி ரமேஸ் ஏறாவூர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார். மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் ஏ.எல்.ஏ.கபூர் முன்னிலையில் அவர் ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(எ)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்12

நாளைமறுதினம் சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவிருந்த பெண் சாரணியர்களுக்கான அழுத்தப் பயிற்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(எ)

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்,12

வடக்கு-தெற்கு சமாதான விளையாட்டு விழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் இந்தவிளையாட்டு விழா சம்பந்தமான நிர்வாக அமைப்புக்கள் அமைக்கப்படவுள்ளதால் யாழ். மாவட்டத்திலுள்ள கலாசார உத்தியோகத்தர்கள், விளையாட்டு அலுவலர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் விளையாட்டுச்சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி.ஏ.எவ். ஜே.ரூபசிங்கம் கேட்டுள்ளார்.(ஒ-5)

## ஆங்கில தினம்

குருநகர்,ஜூன்12

யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் ஆங்கில தினம் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு இன்று யாழ்புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 2 வரையுள்ள வகுப்புக்கள் நடைபெறமாட்டாது என அதிபர் அறிவித்துள்ளார்.

(ஒ-51)

# சீரற்ற பஸ் சேவையால் மாணவர்கள் பாதிப்பு

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து காலை 7.15 மணிக்குப் புறப்படும் தடம் எண் 788இற்கான பஸ்சேவையை சீராக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி மற்றும் இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட மகாவித்தியாலயம் ஆகியவற்றிற்கு செல்லும் மாணவ, மாணவிகள் மேற்படி பஸ் சேவையின் சீரின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. பண்டத்தரிப்பு சந்தியில் பெரும் எண்ணிக்கையான மாணவர்களும், ஆசிரியைகளும் இந்த பஸ்ஸுக்காக காலை 9மணிவரை காத்திருக்க நேரிடுகிறது. பருவகாலச்சீட்டுப் பெற்று செல்லும் இவர்கள் தனியார் மினிபஸ்களிலும் கட்டணம் செலுத்தி சென்றுவர நேரிடுகிறது.

இதுகுறித்து மாணவர்களின் பெற்றோர்கள் வடபிராந்திய போக்குவரத்துச்சபை முகாமையாளருக்கு கடிதம் மூலம் முறையிட்டுள்ளனர்.

(ஒ-135)

# சமாதானத்தை வலியுறுத்தி நடமாடும் மகளிர் மாநாடு

யாழ்ப்பாணம்,ஜூன்12

சமாதான நடைமுறைகளைக் கட்டி எழுப்பும் வகையான நடமாடும் மகளிர் மாநாடு ஒன்று மகளிர் அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்.நாவலர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இரண்டுநாள்களும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை மாநாடு இடம்பெறும்.

இக்கருத்தரங்கில் கொழும்பு எவ்.ஈ.எஸ். அமைப்பின் டயற்மர் கெனித் செல் (Dietmar Kneitschel), யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் மற்றும் விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவுப் பிரதிநிதி ஆகியோர் தொடக்கவுரையை ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து மக்கள் சமாதான முன்னணி பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், நீதிவான்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட பலரும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

(எ-9)

# புகையிரதத் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்ற முடிவு

கொழும்பு,ஜூன்12

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தை தனியான அதிகார சபையாக மாற்றுவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

புகையிரதத் திணைக்களம் நஷ்டத்தில் இயங்குவதை அடுத்தே அரசாங்கம் இந்த முடிவினை மேற்கொண்டுள்ளது. இவ்வாறு ஏற்படும் நஷ்டம் மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் தொடர்பாக இந்திய புகையிரதத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் 'ரயிட்ஸ்' என்ற அமைப்பின் மூலம் ஆய்வுகள் நடத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்த முடிவை மேற்கொண்டுள்ளது.

புகையிரதத் திணைக்களத்தின் நஷ்டம் வருடாவருடம் 17 சதவீதத்தால் உயர்வடைந்து செல்வதாகவும்,

இதன் மூலம் வருடத்தில் சுமார் 450 கோடி ரூபா நஷ்டம் ஏற்படுவதாகவும் -

திறைசேரி தெரிவித்துள்ளது.

இதனையடுத்தே இரண்டு மாத காலத்துக்குள் புகையிரதத் திணைக்களத்தை தனியான அதிகாரசபையாக மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான 193 ரயில் என்ஜின்களில் 60 என்ஜின்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன. 300 வரையிலான பெட்டிகள் திருத்தப்படவேண்டியுள்ளன.(ஒ-10)

# புத்தளத்தில் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவும் அவசியத்தை பிரதமர் ஏற்றார்

## வன்னி மாவட்ட எம்.பி. பதியுதீன் தகவல்

புத்தளம்,ஜூன்12

புத்தளம் பகுதியில் சகல வசதிகளையும் கொண்ட தமிழ் மொழிமூல தொழில் நுட்பக்கல்லூரி ஒன்று அமைக்கப்படுவதன் அவசியத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புனர்வாழ்வு, அகதிகள மறு வாழ்வு அமைச்சின் இணைப்பாளருமான ரிசாத் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த 5 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றக் கட்டடத்தில் சந்தித்து உரையாடினேன்.

புத்தளம் பகுதியில் தமிழ் மொழிமூல தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படவேண்டிய அவசரத்தையும், அவசியத்தையும் அவரிடம் எடுத்துக் கூறினேன்.

புத்தளத்தை வசிப்பிடமாகக் கொண்ட மாணவர்களுடன் இடம்பெயர்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கும் பயன்படும் விதத்தில் இக்கல்லூரி அமைக்கப்படவேண்டும். படித்துவிட்டு வேலையற்றிருக்கும் பெருமளவு மாணவர்கள் இதன்மூலம் நன்மையடைவர் எனத் தெரிவித்தேன்.

இதனை ஏற்றுக்கொண்ட பிரதமர், உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார் - இவ்வாறு அவர் கூறினார்.

(எ)

# பென்ரகன் அதிகாரிகள் சிலரை திட்டுகின்றார் ஹன்ஸ் பிளிக்ஸ்

## ஈராக் விவகாரத்தால் சர்ச்சை



லண்டன்,ஜூன்12

அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகனைச் சேர்ந்த அதிகாரிகள் சிலரை 'பாஸ்டேர்ஸ்' (முறைதவறிப் பிறந்தவர்கள்) என்று ஐ.நா.ஆயுதப் பரிசோதனைக் குழுத் தலைவர் ஹன்ஸ் பிளிக்ஸ் திட்டியுள்ளார்.

குறிப்பிட்ட பென்ரகன் அதிகாரிகள் தன்னை மட்டம் தட்டும் முயற்சிகளை மேற்கொண்டதாகவும் பிளிக்ஸ கூறினார்.

அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப் படைகள் ஈராக்குக்கு எதிரான போரை ஆரம்பிப்பதற்கு முன்னர் அங்கு, பேரழிவு ஆயுதங்களைத் தேடும் ஐ.நா. குழுவிற்கு தலைமை தாங்கியவர் பிளிக்ஸ். அவரது பணி அமெரிக்கர்களுக்குத் திருப்திகரமாக இருக்காத காரணத்தால், அவரை பென்ரகன் அதிகாரிகள் சிலர் கடுமையாக விமர்சித்தனர்.

இது தொடர்பாக லண்டனின் 'கார்டியன்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே பிளிக்ஸ் பென்ரகன் அதிகாரிகளை 'பாஸ்டேர்ஸ்' என்று திட்டினார்.

"அமெரிக்கர்களுடனான எனது உறவுகள் நல்ல நிலையிலேயே இருக்கின்றன. இதனால், அவர்கள் ஈராக் தொடர்பான ஆயுதப் பரிசோதனையாளர்களின் அறிக்கையில் அவர்களுக்குச் சாதகமான சொற்களை எதிர்பார்த்தார்கள்.

"ஈராக் போருக்கு முன்னதாக அங்கு பேரழிவு தரும் ஆயுதங்கள் இல்லை என்று தெரிவித்தமை அவர்களுக்கு சீற்றத்தை வரவழைத்துள்ளது. இதனாலேயே அவர்கள் என்னைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள். நான் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை" - என்றார் பிளிக்ஸ்.

தனது அறிக்கையால் புஷ் நிர்வாகம் கலக்கமடைந்ததாகவும் அவர் கூறினார்.

அமெரிக்கா ஐநாவை ஒரு வெளிச் சக்தியாகவே பார்க்கின்றது என்று கூறும் பிளிக்ஸ் இன்னும் சிறிது காலத்தில் ஐ.நாவின் செல்வாக்கு தாழ்ந்து மறைந்துவிடும் என்றும் தெரிவித்தார். (ம)



இந்திய துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளார். வெள்ளை மாளிகையில் செவ்வாயன்று அவர் அமெரிக்க பாதுகாப்புத்துறை ஆலோசகர் கொண்டலிஸா ரைட்ஸைச் சந்தித்துப் பேசினார். அப்போது சம்பிரதாயங்கள் அனைத்தையும் புறந்தள்ளி வைத்துவிட்டு அதிபர் புஷ் அங்கு வந்து அத்வானியைச் சந்தித்துப் பேசினார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

# பெருவில் கடத்தப்பட்ட தொழிலாளர் விடுவிப்பு!

உலக அரங்கில்

லீமா,ஜூன்12

பெரு நாட்டில் மலைப்பகுதியில் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம் கடத்தப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக விடுவிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட தொழிலாளர்கள் 71பேரும் உடல்நலத்துடனும் பாதுகாப்பாகவும் இருப்பதாக பெரு அதிபர் அலிஜண்ரோ டொலிடோ தெரிவித்தார்.

நூற்றுக்கணக்கான பாதுகாப்புப் படையினரும் பொலீஸாரும் கடத்தல்காரர்களைத் தேடி நடவடிக்கையில் இறங்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

தலைநகர் லீமாவுக்கு 350 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மலைப்பாங்கான இடத்தில் எரிவாயுவைக் கொண்டு செல்லும் குழாய்களைப் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே இடதுசாரிக் கிளர்ச்சியாளர்களால் நேற்றுமுன்தினம் கடத்தப்பட்டிருந்தனர். கடத்தல்காரர்களுக்கு எந்தவிதக் கொடுப்பனவுகளும் கொடுக்காமலேயே கடத்தப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், தாம வேலைசெய்யும் நிறுவனம் கடத்தல்காரர்களுக்கு பணம் கொடுத்தே தம்மை விடுவித்ததாக கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட ஒரு தொழிலாளர் தெரிவித்தார். அதனை அவர் வேலைசெய்யும் நிறுவனம் மறுத்துள்ளது.

கடத்தல்காரர்கள் ஊழியர்களை விடுவிப்பதற்கு ஒரு மில்லியன அமெரிக்க டொலர் பணமும் மருந்துப் பொருள்களும் தொலைத் தொடர்பு உபகரணங்களும் தமக்குத் தரப்பட வேண்டும் என்று முதலில் கோரிக்கை விடுத்திருந்தனர். பின்னர் அவர்கள் எப்படி விடுவிக்கப்பட்டனர் என்று தெளிவாக்கப்படவில்லை. இந்தக் கடத்தல் சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கு இராணுவ மற்றும் பொலீஸ் கொமாண்டோக்களைச் சேர்ந்த 300 பேரை அதிபர் அனுப்பி வைத்துள்ளார். (ம)

# மத்திய கிழக்கு சமாதானம் சிக்கலில் என்கின்றார் புஷ்



இஸ்ரேலியத் தாக்குதலில் காயமடைந்த ரண்டிஸி

ஜெருசலேம்,ஜூன்12

பலஸ்தீனக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இஸ்ரேலிய ஹெலிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, அங்கு மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் பாதிப்படைந்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வில்லியம் புஷ் தெரிவித்துள்ளார். எனினும், சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலிய ஹெலிகள் நேற்றுமுன்தினம் நடத்திய ரொக்கெட் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் அப்துல் அஸீஸ் அல்-ரண்டிஸி மயிரிழையில் காயங்களுடன் உயிர் தப்பினார்.

இந்தத் தாக்குதலுக்காக பழி வாங்குவதற்கு ஹமாஸ் அமைப்பு உறுதி பூண்டுள்ளது. இதனால் விரைவில் இஸ்ரேலியப் பகுதிகளில் தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில், இஸ்ரேலின் தாக்குதலால் சமாதான முயற்சிகள் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளதாக புஷ் தெரிவித்தார். இஸ்ரேலின் இந்தப் போக்கு மிகமோசமானது என்றும் அவர் சொன்னார். "இஸ்ரேலிய ஹெலித் தாக்குதல் அவர்களின் பாதுகாப்புக்கு உதவும் என்று நான் ஒருபோதும் நம்பவில்லை"-என்றார் புஷ். "எனினும் மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல நான் உறுதியாகத் தீர்மானித்துள்ளேன்" என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவின் பின்னணியில் தயாரிக்கப்பட்ட மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தில் கடந்த 4ஆம் திகதி இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத் தலைவர்கள் கையெழுத்திட்டனர். ஒப்பந்தத்தின் படி இரு தரப்புக்களும் வன்முறைகளை நிறுத்த வேண்டும். ஆனால், கடந்த 5ஆம் திகதி முதல் நேற்றுவரை 20 பேர் வன்முறைச் சம்பவங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

வன்முறைகள் தொடர்ந்து கொண்டிருப்பது சமாதான முயற்சிகளுக்கு தீவிர அச்சுறுத்தல் என்று அங்குள்ள செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையில் - தீவிரவாதிகளைக் கண்டுபிடித்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் தெரிவித்துள்ளார்.

காயமடைந்து மருத்துவமனையில் இருக்கும் ஹமாஸ் தலைவர் ரண்டிஸி தன் மீதான தாக்குதலுக்குப் பழிவாங்கப்படும் என்று உறுதியாகத் தெரிவித்தார். உள்ளூர் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் "இஸ்ரேலிய அரசியல் தலைவர்களைக் கொல்லுங்கள்" என்று தீவிரவாதிகளுக்கு அழைப்பு விடுத்தார் அவர். (ம)

# கொங்கோவில் பிரெஞ்சுப் படையினர்!

புனியா(கொங்கோ),ஜூன்12

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் இருக்கும் ஐ.நா. பணியாளர்கள் மற்றும் பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக டசின்கணக்கான பிரெஞ்சுப் படையினர் புனியா நகரை வந்தடைந்துள்ளனர். முதற்கட்டமாக 50 படையினர் நேற்றுக் காலை வந்துசேர்ந்தனர்.

இவர்கள் வருவதற்காக ஐநாவும் ஐரோப்பிய யூனியனும் கடந்த வாரத்தில் மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியிருந்தன. அதில் பிரெஞ்சுப் படைகள் தமது நாட்டுக்குள் வருவதற்கு மக்கள் ஆதரவு தெரிவித்ததை அடுத்தே அவர்கள் அழைக்கப்பட்டனர். அவர்களில் முதற்தொகுதியினர் வந்துசேர்ந்துள்ளனர்.

கொங்கோவில் ஹேமா மற்றும் லென்டு ஆகிய இனங்களிடையில் தொடரும் நீண்டகாலப் போரின் விளைவாக அங்கு இதுவரையில் 10 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த வாரத்தில் மட்டும் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர்.

1998 ஒகஸ்டில் ஆரம்பித்த இரு இனங்களதும் ஆயுதக் குழுக்கள் இடையிலான மோதலில் பரஸ்பரம் அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏழை நாடான கொங்கோவில் பட்டினி தலைவிரித்தாடுகின்றது. இதனால், அங்கு பெரும் எண்ணிக்கையானவர்கள் உயிரிழந்து வருகின்றனர். 1998ஆம் ஆண்டுக்குப் பின்னர் போர் மற்றும் பட்டினியால் 25 லட்சம் பேர் உயிரிழந்துள்ளதாக ஐ.நா. மதிப்பிட்டுள்ளது. இதனைத் தடுக்க அங்கு ஐ.நா. பணியாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆனால், ஆயுதக்குழுக்கள் அவர்களுக்குப் பெரும் இடைஞ்சல்களை ஏற்படுத்தி வருகின்றன. இதனைக் கட்டுக்குள் கொண்டுவந்து பொதுமக்களுக்கு உதவி செய்வதற்காகவே பிரெஞ் துருப்புக்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. (ம)



2ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பின்னர் விடுதலையாகிய மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் இஸாம் முஹமது நூர் தன் புதல்வர்களுடன் இருக்கும் காட்சி. ஆட்சியை கவிழ்க்க சதி செய்ததற்காக இவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

# ஈரான் அணு நிபுணர்கள் வடகொரியாவுக்கு விஜயம்

டோக்கியோ,ஜூன்12

ஈரானிய அணு நிபுணர்கள் சிலர் வடகொரியாவுக்கு ரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அணுவாயுத உற்பத்தி தொடர்பாக உலக நாடுகளின் கண்டனத்துக்கு வடகொரியா ஆளாகி வரும் நிலையில் தனது அணு விஞ்ஞானிகளை ஈரான் அங்கு அனுப்பியுள்ளமை பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது என்கின்றனர் ஆய்வாளர்கள். அண்மையில் ஈரான் அணுவாயுதங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டி இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

மார்ச் மற்றும் மே மாதங்களில் மூன்று தடவைகள் ஈரானிய அணு விஞ்ஞானிகள் வடகொரியாவுக்கு ரகசியப் பயணத்தை மேற்கொண்டதாக ஜப்பானியப் பத்திரிகை 'ஷங்காய்' தெரிவித்தது.

சர்வதேச அணுப் பரிசோதகர்கள் ஈரானுக்கு விஜயம் செய்யும் பட்சத்தில் அவர்களைச் சமாளிப்பது எப்படி என்பது குறித்து வடகொரிய அணு விஞ்ஞானிகள் ஈரானிய விஞ்ஞானிகளுக்கு வகுப்பு நடத்தியுள்ளதாகவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ம)

# எதிர்க்கட்சித் தலைவர் பொலீஸாரின் காவலில்

ஹராரே,ஜூன்12

சிம்பாப்வேயில் எதிர்க்கட்சித் தலைவர் மோர்கன் இராஜதுரோகக் குற்றச்சாட்டின் பேரில் பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஆனால், இவருடன் சேர்த்துக் குற்றஞ்சாட்டப்பட்ட அவரது கட்சியான ஜனநாயக மாற்றத்துக்கான முன்னணியின் செயலாளர் அந்தக் குற்றசாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

தன்னுடைய ஆதரவாளர்களை அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபடத் தூண்டினார் என்று மோர்கன் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் ஜனாதிபதி ரொபேட்டோ முகாபேக்கு எதிராக எதிர்க்கட்சி ஒழுங்கு செய்த ஆர்ப்பாட்டப்பேரணியைத் தொடர்ந்தே மோர்கன் கைது செய்யப்பட்டார்.

அந்த எதிர்ப்புப் போராட்டத்தை தனது படைகளைக் கொண்டு முகாபே அரசு அடக்கிவிட்டது. எனினும், அதற்குக் காரணமாக இருந்த எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்துள்ளது.



எதிர்க்கட்சித் தலைவர்

நேற்று அவர் பலத்த பாதுகாப்பின் மத்தியில் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். அங்கு அவரை பொலீஸ் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் மோர்கனுக்கு தூக்குத் தண்டனைகூட விதிக்கப்படலாம். (ம)

# ரஷ்யாவில் 120பேர் கைது!

ரஷ்யாவில் மதப்பழமைவாதிகள் 120 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் ஆப்கானிஸ்தானில் அல்கெய்டா அமைப்பிடம் பயிற்சி பெற்ற அராபியர்கள் என்று தெரிகின்றது. ரஷ்யாவின் தேசியதினம் இன்று. அதனை முன்னிட்டு நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலீஸார் மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் போதே இவர்கள் கைதாகினர்.

மூடப்பட்ட தொழிற்சாலை ஒன்றுக்குச் சொந்தமான குடியிருப்புப் பகுதியில் இவர்கள் தங்கியிருந்துள்ளனர். இவர்களிடம் இருந்து ஆயுதங்கள், கைக்குண்டுகள், பிளாஸ்டிக் வெடிப் பொருள்கள், வெடிக்கவைக்கும் கருவிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.(ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## துரித சேவை

புகைப்படச் சுருள்கள், CD, FD போன்றவற்றில் உள்ள படங்களை ACME, VASAN'S, Photo chrome போன்ற விரும்பிய LAB இல் விரைவாக பிறின்ரிங் செய்து தரப்படும். நேரிலும் வந்து தொடர்புகொள்ளப்படும். MASTER ஸ்ரேசன் வீதி, கனகசபாபதி ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (19017)

## வாடகைக்கு

அறைகள் வாடகைக்கு உண்டு. பாடசாலை மாணவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: இல.67/9, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். T.P.222 2916 (19002)

## மணமகள் தேவை

வடமராட்சிப் பகுதியில் சொந்த வியாபாரம் செய்யும் நற்பண்புள்ள, 32 வயது மணமகனுக்கு நல்ல குடும்பப்பாங்கான மணமகள் தேவை. தொடர்பு: வி.இல.1925, மே/பா உதயன். (13906)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அமெரிக்காவில் தொழில் புரியும், 29 வயதுடைய, 4இல் செவ்வாய், கிரகபாவம் 21 உடையவருக்கு ஆங்கில அறிவுடைய, அழகான மணப்பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக்குறிப்பு, குடும்ப விவரத்துடன் தொடர்புகொள்ளவும். விள.இல. 1924, மே/பா உதயன். (18999)

## திருமண சேவை

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில்புரியும் மணமகன்களுக்கு படித்த, பட்டதாரி மணமகள்கள் தேவை. படம், ஜாதகம் என்பவற்றுடன் உடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும் தபால்மூலம் ஏற்கப்படமாட்டாது. தொடர்பு: லலிதா திருமணசேவை, N.கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (18968)

## இலக்கியக் கட்டுரைகள்

'பொருளோ பொருள்' நாடகத்திற்கு விளக்கம் எழுதியுள்ளார் பேராசிரியர் கணபதிப்பிள்ளையிடம் கற்று, அவரது நாடகங்களிலும் நடித்த கலாபூஷணம் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை. வேறு கட்டுரைகளும் உண்டு. க.பொ.த. மாணவர்களுக்குரியது. (19030)

## தேவை

லண்டன் A/L பயிலுகின்ற மாணவிக்கு Mathematics & Statistics Accounting ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர் / ஆசிரியை தேவை. தொடர்பு: T.P.No.:021 222 2478 (19026)

## வீடு விற்பனைக்கு

இருபாலைச் சந்தியிலிருந்து பழைய வீதியில் 200m தூரத்தில் வீதி ஓரத்தில் இருபரப்புடன் வீடு எல்லா வசதியுடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. கருணராசன், பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் (சிவா கடை அருகில்). (19019)

## காணி விற்பனைக்கு

அளவெட்டியில் (சென்.ஜோசப் தேவாலயத்திற்கு அருகில்) பிரதான பஸ் பாதையில் இரண்டு வீதி முகப்புகளுடன் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மிகக்கூடிய விலை வழங்குபவர்களுக்கே கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: மேற்படி தேவாலய பங்குத் தந்தையோடு அல்லது இல. 108, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 12ஆம், 13ஆம் திகதிகளில் அல்லது T.P.: 074-202937இல் தொடர்புகொள்ளவும். (18794)

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. விலை 140/-. மொத்தக் கொள்வனவுக்கு கழிவு தரப்படும். தொடர்பு: இ.பாலன், வராகி கோயில் வீதி, கேணியடி, கொக்குவில் மேற்கு. (19009)

குளிர்சாதனப் பெட்டிகள் (சிசில், உஷா), ரீ.வி. டெக், பலகைக் கதவுகள், நிலைகள், பனை மரங்கள், சிலாகைகள், தகரக்கேற் (அகலம் 12 அடி, உயரம்81/2அடி), கூரைத் தகரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.67/42, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். T.P. 222-2916. (19001)

கல்லூரி ஒழுங்கை, ஆனைக்கோட்டை, மானிப்பாயில் 10 பரப்புக் காணி வீட்டுடனும் நல்ல தண்ணீர் கிணற்றுடனும் ஏனைய பிரயோசனங்களோடும் விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு: "சிவபதி", ஆனைக்கோட்டை அல்லது 106, ஸ்ரேசன் றோட், யாழ்ப்பாணம். (19028)

யாழ் நகரிலுள்ள கேபிள் தொலைபேசி IDD விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 5197. (19025)

## தவறிவிட்டது

புலோலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சூரியகாந்தனின் தே.அ.அ. (இல.591722590v), விசேட அ.அ., உத்தியோக அ.அ. என்பன கவருடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் பஸ் நிலையத்திற்கும் இடையில் 21.05.2003 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் முருகமூர்த்தி (சிறிலங்கா ரெலிகொம்) அல்லது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கொடுத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (19023)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அந்தோனிப்பிள்ளை மரியம்மா

மாரீசன்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனிப்பிள்ளை மரியம்மா நேற்று (11-06-2003) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளையின் (மரியதாஸ்) அன்பு மனைவியும் பேரின்பநாயகம் (ராசா), A.S.ராஜதுரை, A.B.ஜெயராஜா (ஜெயந்தா அழகு மாடம், பண்டத்தரிப்பு), மரியஸ்ரெலா, தோமஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரான்சிஸ் சேவியர், பிலோமினா, ஜசிந்தா, சந்தானா, யூடிஸ் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இன்று (12-06-2003) வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு புனித கயித்தார் ஆலயத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*மாரீசன்கூடல்,*
*இளவாலை.* (19029)

தகவல்:
அ.ப.ஜெயராஜன் (மகன்).

## சின்னத்தம்பி முத்துக்குமாரு

(கேசாவில் பிள்ளையார் கோவிலடி)

வண்ணார்பண்ணை, கேசாவில் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி முத்துக்குமாரு நேற்று (11.06.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து முத்துக்குமாருவின் அன்புக் கணவரும் இந்திராணி, தனபாலசிங்கம் (முன்னாள் உத்தியோகத்தர் C.T.B.), புபாலசிங்கம் (C.T.B. பருத்தித்துறை டிப்போ), விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2003) வியாழக்கிழமை திருநெல்வேலி கிழக்கு, அரசடி ஒழுங்கையில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'பத்மாஜினி அகம்'*
*அரசடி ஒழுங்கை,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (19035)

தகவல்:
மு.தனபாலசிங்கம்
(மகன்).

## திறப்பு விழா!

சுமார் 7லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை மண்டபத் திறப்பு விழா இன்று திருச்சபை போதகர் ஜீவ. சதீஸ் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளது. இலங்கை மெதடிஸ்த திருச்சபை மகா சங்கத் தலைவர் அருட் திரு.ஆர்.பி.பெர்னாண்டோ இதனைத் திறந்துவைப்பார். வடக்கு - கிழக்கு திருச்சபை மாவட்ட அவைத் தலைவர்களும், ஜே.கதிரேசபிள்ளை அடிகளாரும் இவ்விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-10-173)

## வீடு உடன் விற்பனைக்குண்டு

எமது சமாசத்திற்கு சொந்தமான வளாக வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள 3 1/2 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. விண்ணப்பப்படிவங்களை 25.06.2003 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு:-

வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
இல. 52, சோமசுந்தரம் ஒழுங்கை,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
(C-28369) தொலைபேசி இல.: 222 - 5072

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கு நிர்மாணப் பயிற்சி நிலையத்தின் (இக்ராட்) பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் 25-06-2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்* என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கும் எதிர்வரும் 25.06.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ பதிவுத் தபால்மூலமோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். உறையின் இடது பக்க மேல்மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

| வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்வி பத்திரப்பணம் | பெறுமதிகூட்டல் வரி 20% (வற்) |
|---|---|---|---|
| 01. முருகமூர்த்தி கோயில் வீதி, திருத்தம், சங்கானை | 4,000.00 | 500.00 | 100.00 |
| 02. செட்டியார் மடம் 2ஆம் ஒழுங்கை திருத்தம் | 3,500.00 | 450.00 | 90.00 |
| 03. அராலிப் பிள்ளையார் கோவில் வீதி திருத்தமும் கல்வெட்டு அமைத்தலும் | 4,000.00 | 500.00 | 100.00 |
| 04. சத்தியக்காட்டு மீன் சந்தை திருத்தம் | 2,000.00 | 300.00 | 60.00 |
| 05 சங்கானை மரக்கறிச் சந்தையில் மலசலகூடம் அமைத்தல் | 3,500.00 | 450.00 | 90.00 |
| 06. தலைமையலுவலக வாகனத் தரிப்பிடத்திற்கு தார் வீதி அமைத்தல் | 2,000.00 | 300.00 | 60.00 |

மேற் குறிப்பிட்டமீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணத்தையும் அதற்கான வற்வரியையும் செலுத்துவதன்பேரில் 23.06.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமாக மேலதிக விவரங்களை தலைமையலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
தலைமையலுவலகம்,
சுழிபுரம்.
12.06.2003 (சி-28368)

திருமதி சா.சிவானந்தராசா
செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.

## வலயக்கல்வி அலுவலகம் - வலிகாமம்

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | யா/மானி.சென்.ஆன்ஸ் றோ.க.த. மாடிக் கட்டடத் தொடர் வேலை | 500/- | 11,000/ |

01. மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 8உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவுசெய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர்.
02. கேள்விப்பத்திரங்கள் பெறுமதிசேர் வரி (VAT) 10% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பெறுமதி சேர் வரி (VAT) 10% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.
03. மேற்படி வேலைக்கான கேள்விப்பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து கேள்விப்பத்திரங்களை 12.06.2003ஆம் திகதியிலிருந்து 18.06.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் இட்டு ஒட்டப்பட்ட ஒப்பந்தகாரரின் முத்திரையிடப்பட்டு மருதனார்மடத்தில் உள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்கு பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
05. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவுசெய்யப்படும் திகதியில் இருந்து 3 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளிக்க வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாக பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மருதனார்மடம்,
சுன்னாகம்,
10.06.2003 (சி-28358)

திருமதி ஜெ.இருதயநாதன்,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம்.

# உதயன்

## இன்றைய நிலையில் இலக்கை அடைய முடியுமா?

நாட்டில் தொடர்ந்து நடந்துவந்த கொடிய யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைக்குத் தகுந்த அரசியல் தீர்வு கண்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு 2001 பொதுத் தேர்தலில் உறுதி அளித்து மக்களின் ஆணையைப் பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஆட்சி நடத்தத் தொடங்கியதும் விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டு, யுத்தத்தை நிறுத்தி, புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் நடத்தி, அதில் ஓரளவு வெற்றியும் கண்டார் பிரதமர்.

இப்போது சமாதான முன்னெடுப்புகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ள போதிலும் ஜப்பான் டோக்கியோவில் நடைபெற்ற உதவும் நாடுகளின் மாநாடு பிரதமருக்குப் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

சமாதான முன்னெடுப்புகளுக்கு சர்வதேச சமூகம் பக்கபலமாக இருக்கிறது; எந்த உதவியையும் செய்யத் தயாராக இருக்கிறது என்பதைக் கண்டதும் பிரதமர் பூரித்துப் போய் புது உத்வேகத்துடன் சமாதான முன்னெடுப்புகளைத் தொடரத் தீர்மானித்துள்ளார்.

பிரதமர் இதுவரை செய்த சில காரியங்கள், முன்னைய அரசாங்கத் தலைவர்கள் போல் அவரும் பாசாங்கு செய்கிறாரோ என்று பலரையும் சந்தேகிக்க வைத்த சந்தர்ப்பங்கள் உண்டு.

அப்படிச் சந்தேகித்தவர்கள் கூட, பிரதமர் தாம் விரும்பியபடி எல்லாவற்றையும் செய்ய முடியாத கையறு நிலையில் இருக்கிறார் என்ற உண்மையை உணராமலும் இல்லை.

அவருடைய ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை கூட இல்லை. தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முதலானவற்றின் ஆதரவைக்கொண்டு சாதாரண பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி நிலைத்திருக்கிறது. மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருந்தால்தான் அரசமைப்பில் வேண்டிய திருத்தங்களைச் செய்து சமாதான முயற்சிகள் தொடர்பான எத்தனையோ காரியங்களை நிறைவேற்ற முடியும்.

அரசாங்கத்தின் இந்தப் பலவீனத்தை மாற்றுக் கட்சித் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார். தனது நிறைவேற்று அதிகாரங்களைக் காட்டி ஆட்சிக் கலைப்புப் பயமுறுத்தலைக்கூட விடுத்து வருகிறார். அவரை ஜே.வி.பியினரும், சிங்கள இனவாதக் கும்பல்களும், சமாதான முயற்சிகளுக்கு விரோதமான மற்றும் சக்திகளும் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி தாம் முப்படைகளின் தளபதி என்ற வகையில் படையினரில் ஒரு பகுதியினரைத் தனது கைக்குள் வைத்துக் கொண்டு சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் ஏற்படக்கூடிய விதத்திலும் அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தக்கூடிய மாதிரியும் படையினர் நடப்பதற்கு அவர்களுக்குத் துணை போகிறார் என்று பரவலாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

படையினரின் போக்கை விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், கடந்த 10 ஆம் திகதி ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் நடந்த கூட்டத்தில் விமர்சித்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின காணி விவகாரங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து தீர்வு கண்டு புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான மாவட்டக் குழுக் கூட்டம் அது.

அந்தக் கூட்டத்தில் கௌசல்யன் பேசுகையில், படையினர் பற்றிப் பின்வருமாறு கூறினார்:-

நல்லுறவுடன் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த தமிழ், முஸ்லிம் மக்களிடைய யுத்த சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட கசப்புணர்வுகளை மறந்து இரு தரப்பினரிடையேயும் மீண்டும் நல்லுறவை வளர்க்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

இந்தச் சூழ்நிலையில் பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகள் கவலையை அளிக்கின்றன.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 4 ஆம் திகதி எமது அப்பாவிப் போராளி ஒருவர், எமக்கு எதுவித தொடர்பும் இல்லாத ஒரு கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்படுத்தி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அங்குள்ள பொலீஸாரின் தவறான செயற்பாட்டால் இது நடந்திருக்கின்றது.

நாம் சமாதானத்தை வேண்டி நிற்கும் இச்சந்தர்ப்பத்தில் எங்களை மீண்டும் யுத்தத்துக்கு வலிந்து இழுக்கும் சூழ்நிலையை பாதுகாப்புப் படையினர் ஏற்படுத்தி வருகின்றனர்.

இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது தமிழர்களுடைய படையை மீண்டும் கட்டி வளர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டி ருப்பது தெரிகிறது.

பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகள் முன்பிருந்ததைவிடக் கூடிக்கொண்டு வருகின்றன. அவர்கள் நல்ல சூழ்நிலையை, சமாதானத்தை விரும்பாதவர்களாக தென்படுகின்றனர்.

ஆனால், நாங்கள்தான் முதலில் யுத்தம் வேண்டாம் என்று நிற்பவர்கள், யுத்தத்தின் கொடுமையை உணர்ந்தவர்கள், நாம் மீண்டும் யுத்தம் செய்யும் நோக்கில் இல்லை - இப்படி அவர் கூறினார்.

பிரதமர் எவ்வளவு விரும்பினாலும், எப்படி முயன்றாலும் படையினரைக் கட்டுப்படுத்த வியூகம் வகுக்காமல் இலக்கை அடைய முடியாது.

## மார்பு நோய் வைத்தியசாலையை பண்ணையில் அமைப்பதில் சிக்கல்

யாழ்ப்பாணம்,ஜுன்12

யாழ்.பண்ணைப் பகுதியில் மார்புநோய் சிகிச்சை வைத்தியசாலையை மீளக்கட்டுவதற்கு நிதி உதவி கிடைத்தும் அவ் வைத்தியசாலையை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீண்ட காலமாக பண்ணைப் பகுதியில் உள்ள அரச காணியில் இந்த வைத்தியசாலை இயங்கி வந்தது.

கடந்தகால போர்ச்சூழல் காரணமாக இந்த வைத்தியசாலை இடம்பெயர்ந்து காலத்துக்குக் காலம் வெவ்வேறு இடங்களில் செயற்பட்டு வருகின்றது.

தற்சமயம் இந்த வைத்தியசாலையை அமைக்க 2கோடி ரூபா யாழ்.செயலகத்துக்குக் கிடைத்துள்ளது. நவீன வசதிகளுடன் மேற்படி வைத்தியசாலையை அமைக்க யாழ். செயலகம் ஏற்பாடுகளை மேற்கொண்டது.

அந்த வைத்தியசாலைக்குரிய காணியைப் பார்வையிட யாழ். செயலக அதிகாரிகள் சென்ற சமயம், அந்தக் காணியில் வழிபாட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதன் காரணமாக இந்த வைத்தியசாலையை அங்கு அமைக்க முடியுமா என்ற கேள்வி தற்சமயம் எழுந்துள்ளது.

தொற்றுநோய் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த வைத்தியசாலை நகருக்கு வெளியே புறம்போக்கான - கடலை அண்டிய - பகுதியில் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் இந்தப் பகுதியில் முன்னர் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## நாட்டு நடப்பு

### கைக்கு எட்டியது வாய்க்கெட்டுமா?

ஐயனோ அரங்கம் ஏறி
அனைவரிடம் கையை ஏந்தி
பையவே பணமும் சேர
பக்குவமாய் மூடை கட்டி
கையிலே கனத்த மூடை
காவியே கொண்டு வாறார்
தையலாள் எமது அம்மா
தனிப்பெரு வீர நங்கை
கை எழுத்ததனை யிட்டு
கலைத்திடில் நாடாளுமன்று தன்னை
ஐயகோ! ஆண்டி மண்ணால்
அமைத்த பொய்க் கோபுரமும்
பையவே சரிந்து வீழ
பரிதாபமாய் சிரிப்பரன்றோ
கையினுக்கு கிடைத்த காசும்
வாய்க்கெட்டாமல் போயிடுமோ?

- விகடகவி.

# சமாதான சூழலை கெடுக்கும் வகையில் படையினரின் செயற்பாடுகள் உள்ளன!

## யாழ்.பல்கலை. மாணவர் ஒன்றியம் கண்டனம்

நெருக்கடிக்குள்ளாகியுள்ள சமாதான சூழ்நிலையை மேலும் மோசமாக்கும் வகையில் ஸ்ரீலங்கா படையினரின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் புளியந்தீவுக் கோட்டப் பொறுப்பாளர் சத்தியராஜை விடுதலை செய்யக் கோரி கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தி வரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதானத்துக்கான சூழ்நிலை நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் இவ்வேளையில், ஸ்ரீலங்காப் படையினர் நிலைமையை மோசமாக்கும் வகையில் அச்சுறுத்தல்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். பதற்ற நிலையைத் தோற்றுவித்து மக்களின் இயல்பு வாழ்வை சீர்குலைத்து போர் ஒன்றை உருவாக்கும் முஸ்தீபில் அவர்கள் ஈடுபட்டுள்ளனரோ என்ற சந்தேகம் உருவாகியுள்ளது. இதனை உறுதிப்படுத்துவது போன்றே மட்டக்களப்பில் புளியந்தீவுக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சத்தியராஜ், ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புளியந்தீவுக் கோட்டப் பொறுப்பாளரை ஸ்ரீலங்காப் படையினர் கைதுசெய்தமை புரிந்துணர்வு உடன்பாட்டை மீறும் செயலாகவே உள்ளது. எத்தனையோ முயற்சிகள் மேற்கொண்ட போதும் அவரை விடுவிக்க ஸ்ரீலங்கா இராணுவம் மறுத்துள்ளது. அவரை விடுதலை செய்யக் கோரி கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். நிராயுதபாணிகளான விடுதலைப் புலிகளை ஆயுதபாணிகளான ஸ்ரீலங்காப் படையினர் தொடர்ந்தும் கைதுசெய்து வருகின்றமையை கண்டித்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொள்ளும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் எமது ஒத்துழைப்பினையும், தார்மீக ஆதரவையும் வழங்குகின்றோம். அதேவேளை, புளியந்தீவுக் கோட்டப் பொறுப்பாளரை உடன்விடுவிக்குமாறு கோருகின்றோம்.

அஹிம்சை வழியிலான மாணவர்களின் போராட்டத்துக்கு ஸ்ரீலங்கா இராணுவம் தலைசாய்க்க வேண்டும். இதன் வழி இனி மேலாயினும் புரிந்துணர்வு உடன்பாட்டை மீறும் இத்தகைய செயல்களையும் அது நிறுத்தவேண்டும் என்றுள்ளது. (ஒ)

# சிறுவர் பராமரிப்பு நிலையங்களை கண்காணிப்பதில் அலுவலர் மெத்தனம்

## சமூக நலனில் அக்கறையுள்ளோர் கவலை

யாழ்ப்பாணம்,ஜுன்12

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களைத் தகுந்த முறையில் கண்காணிப்பதில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மெத்தனம் காட்டிவருவதாக சமூகநலனில் அக்கறையுள்ளோர் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் ஆதரவற்ற சிறுவர்களைப் பராமரிக்கும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. இச்சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் தகுந்த பாதுகாப்புடனும் சிறுவாகள் தங்கி வாழ்வதற்கேற்ற சூழ்நிலையுடனும் இயங்குகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கு யாழ்.செயலகத்தின் கீழ் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பராமரிப்பு நிலையங்களில் தங்கியுள்ள சிறுவர்களது உரிமைகள் மீறப்படுவது, அவர்கள்மீது பாலியல் துஷ்பிரயோகம் நடத்தப்படுவது ஆகியவை இடம்பெறாமல் தடுப்பதே இந்த அலுவலர்களது பிரதான பணியாகும்.

எனினும், கடந்த சில மாதங்களாக யாழ்குடாநாட்டில் உள்ள சில சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் முறைகேடுகள் நடந்து வருவதாக செய்திகள் வெளியாகின்றன.

சம்பந்தப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் தகுந்த பாதுகாப்பு இன்றியும் சிறுவர்கள் தங்குவதற்கான சரியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமலும் இயங்கி வந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறுவர் பராமரிப்பு நிலையங்களை கண்காணிப்பதற்கென உள்ள அலுவலர்கள் தமது பணியை சரிவரச் செய்யாததும் பராமரிப்பு நிலையங்களில் துஷ்பிரயோகங்கள் மற்றும் முறைகேடுகள் நடக்க வாய்ப்பாக அமைந்துள்ளது. அந்த அலுவலர்கள் தமது கடமையைச் சரிவர மேற்கொண்டிருத்தல் வேண்டத்தகாத சம்பவங்களை முன்கூட்டியே தடுத்திருக்க முடியுமெனவும் சமூக நலனில் அக்கறையுள்ளோர் தெரிவிக்கின்றனர். (ஒ-8)

# மணல் அகழ்ந்து ஏற்றுவதில் அலுவலர்களுக்கு முன்னுரிமை

## பொதுமக்கள் தரப்பில் விசனம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் அனுமதி பெற்று மணல் அகழ்வதில் சில அரச அலுவலர்களின் டிராக்டர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக பொதுமக்கள் தரப்பில் குறை கூறப்படுகிறது.

தென்மராட்சிப் புனரமைப் ப் பணிகளுக்கென தற்போது நாவற்குழி மற்றும் கோவிலாக்கண்டிப் பகுதியில் மணல் அகழ அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் பணி கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மணல் ஏற்றிச் செல்ல அனுமதி பெற்ற பொதுமக்கள் மணித்தியாலக் கணக்கில் காத்திருந்து மணல் ஏற்றவேண்டியிருப்பதாகவும் -

ஆனால், அரச அலுவலர்கள் சிலரின் டிராக்டர்கள் தடங்கலின்றி முன்னுரிமையுடன் மணல் ஏற்றிச் செல்வதாகவும் - கூறப்படுகிறது.

(ஒ-117)

### நாளை

வைகாசி 30
வெள்ளிக்கிழமை
13.06.2003
திதி : சதுர்த்தசி
முன்னிரவு 7.30 வரை
நட்சத்திரம் : அனுஷம்
முன்னிரவு : 8.25 வரை
சுபநேரம் : 5.52-7.22
ராகுகாலம் : 10.22-11.52
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

ஒரு நிமிடம் தாமதமாகச் செல்வதை விட ஒரு மணி நேரம் முன்னதாகச் செல்வது மேல்.

# யுவதியுடன் தனிமை தேடியவர் இளைஞர்களிடம் சிக்கினார்!

வலி.வடக்கு,ஜுன்12

சட்டத்தைக் காக்க வேண்டியவர், யுவதி ஒருவருடன் தனிமை தேடி அலைந்தபோது கலாசாரத்தைப்பேணும் இளைஞர்களிடம் சிக்கினார்

நேற்று சுன்னாகம் பஸ்நிலையம் அருகே உள்ள ஒழுங்கையில் இசசம்பவம் இடம்பெற்றது.

சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டும் பணியில் பொறுப்பான பதவி வகிக்கும் மேற்படி நபர் பஸ் நிலையத்திலிருந்து யுவதி ஒருவரை அழைத்துக்கொண்டு ஒழுங்கைக்குள் சென்றதாகவும் -

கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் இதனை அவதானித்ததால் அந்த நபரும், யுவதியும் மீண்டும் பிரதான வீதிப் பக்கம் சென்று நழுவ முற்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் அவர்களுடன் பேச முற்பட்டனர்.

அப்போது பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தவர்கள் அங்கு கூடியதைப் பயன்படுத்தி அந்த நபர் அங்கிருந்து நழுவியதாகக் கூறப்படுகிறது.

பின்னர் அந்த யுவதி எச்சரித்து அனுப்பப்பட்டார்.

சம்பந்தப்பட்ட நபருக்குத் தமிழ் தெரிந்திருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-86)

# MODERN NET

கொக்குவிலில் இன்று முதல்,
குறைந்த கட்டணத்தில் அனைத்துக் கணனிசார் சேவைகளையும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்.



இன்ரநெற் போன் (NET 2 Phone)
உள்நாட்டு அழைப்புக்கள்
Computer Printing
CD Writting
Scanning
Photo Copy
Fax.
உள்நாட்டு அழைப்புக்களுக்கு 2/= மட்டுமே!

**MODERN NET**
125, புகையிரதநிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
(நூல்நிலையம் முன்பாக).

(19011)



## நல்லூர் ஸ்ரீ முத்துவிநாயகர் தேவஸ்தானம்



*(மேற்கு வீதியில் அமைந்துள்ளது)*

மஹா கும்பாபிஷேக தின அபிஷேக விஞ்ஞாபனம்

நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துவிநாயகப் பெருமான் ஆலயத்தில் கும்பாபிஷேக தினத்தை முடிவாகக்கொண்டு வைகாசி மாதம் 30ஆம் நாள் நாளை (13.06.2003) வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆனித் திங்கள் 7ஆம் நாள் (22.06.2003) ஞாயிற்றுக்கிழமைவரை பிரதிதினமும் காலை 10மணிக்கு விநாயகருக்கு நவகலச அபிஷேகமும் விசேட பூஜையும் இடம்பெறும்.

மணவாளக் கோலதினமாகிய 22.06.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 108 சங்காபிஷேகமும் கணபதி ஹோமம், விசேட பூஜை, உற்சவம் என்பனவும் இடம்பெறும்.

அடியார்கள் பூஜாகாலங்களில் விநாயகரைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வார்களாக.

ஸ்ரீ முத்துவிநாயக தேவஸ்தானம், நல்லூர். (18973) ச.சோமசுந்தரசர்மா.



## உள்ளூராட்சி வார
## கட்டுரை, பேச்சுப்போட்டி

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் வாழும் பாடசாலை மாணவர் மற்றும் மக்களிடையே கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளை நடத்த விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

**கட்டுரைப்போட்டி** :- சமாதானம் நிலை பெறுதலின் அவசியம்
- 45நிமிடம் (எவரும் பங்குபற்றலாம்)

**பேச்சுப்போட்டி** :- கலாசார சீரழிவால் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்பு
- 5நிமிடம் G.C.E. O/L, A/L மாணவர்கள் மட்டும்.
- பாடசாலை மாணவர்கள் அதிபர் சிபார்சு ஊடாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

(வெற்றியாளர்களுக்கு பரிசில் சான்றிதழ் வழங்கப்படும்)

இரண்டு போட்டிகளுக்குமான இறுதி விண்ணப்பதிகதி: 30.06.2003

இறுதிப்போட்டிகள் யாவும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும்.
காலம் : 06.07.2003 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : இரண்டு போட்டிகளுக்குமான விண்ணப்பதாரர் காலை 9.00 மணிக்கு சமுகந்தரவும்

விண்ணப்பங்களை "உள்ளூராட்சி உதவியாளர், வலி.தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பிரதேச சபை,
மானிப்பாய். (28359)

பி.விக்டர்
செயலாளர்.



## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
## பதவி வெற்றிடம்

உதயன் விளம்பர இலக்கம் சி-28302 திகதி 09.06.2003 பக்கம் 13 தொடர்ச்சி.

மேற்படி விளம்பரத்தில் தவறுதலாக விடப்பட்ட பின்வரும் பதவியையும் சேர்த்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| பதவியின் பெயர் | சம்பள குறியீடு | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| | 108/81 165/88 | |
| விற்பனையாளர் | 308.15 308.17 | 01 |

விற்பனையாளர் சம்பள அலகு 308.15 (108/81) 308.17 (165/88)
சம்பளத்திட்டம் 3000 - 4150 (31/97 சுற்றிக்கைக்கமைய)
55x10 - 60x10

வயதெல்லை : 18-45 வருடங்கள் (31/97 சுற்றிக்கைக்கமைய)
தகைமைகள்: (அ) க.பொ.த.ப. (கனிஷ்ட பிரிவு) சித்தி
அல்லது
(ஆ) 8ஆம் வகுப்பு சித்தியும் விற்பனை வேலையில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் (108/81) சுற்றிக்கைக்கமைய)

நீர்வேலி.
10.06.2003 (சி-28362)

அ.க.த.கிருஷ்ணராசா
தலைவர்.


## 90ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய நிகழ்வும்

தோற்றம்
1955
05
13



மறைவு
2003
03
15

அமரர்
## நல்லதம்பி இராஜகுலசிங்கம்

அன்பின் இலக்கணமே எம் ஆசை - சகோதரனே!
உன்னைக் காண்பதற்கு உயிரே -உருகுதையா!
காலத்தின் கட்டளையால் கலங்கவைத்துச் சென்றாயோ?
உன்னை தினம் துதித்து உறங்குகின்றோம் - உன் நினைவில்.
என்றும் உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உசன்,
மிருசுவில். (18950)

என்றும் உம் நினைவுடன் வாடும்:
குடும்பத்தார்.


பாலைவனச் சோலை ஊழியம் நடத்தும்
# இயேசுவின் இன்பப் பெருவிழா

| இடம்: | திகதி: | நேரம்: |
|---|---|---|
| மானிப்பாய் செல்லமுத்து மைதானம் | ஆனி (ஜூன்) மாதம் 12,13,14,15 | பிற்பகல் 4.30 மணி |

தேவ செய்தியாளர்:
சகோதரி **பத்மா முதலியார்**
(சென்னை,இந்தியா)



சிறப்புப் பாடல்கள்
சகோ.ஜாண்ஜேபேஸ் & குழுவினர்

பாவம், வியாதி, பில்லி சூனியம், கடன் பாரம் இவைகளிலிருந்து உடனே விடுதலை பெற ஜெபியுங்கள்!

வீட்டு, நோயின் ஜெப எண்ணெய் இலவசமாய் வழங்கப்படும்

குறிப்பு: ஆனி(ஜூன்) மாதம் 13,14 காலை 9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் ஊழியர்கள், விசுவாசிகளுக்கான வேதபடிப்பு நடைபெறும்.

இயேசு இன்றும் அற்புதம் செய்கிறார்!

அனுமதி இலவசம்!!

தொடர்பு: யாழ்குடா ஊழியர் ஐக்கியம்
T.P.: 222 3653, 222 2930, 222 3286

(18721)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்12

ஊர்காவற்றுறை ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு ரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஒ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்12

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை காலை திருநாள் திருப்பலியும் மறுநாள் புனிதரின் திருச்சொருப பவனியும் நடைபெறவுள்ளன. (ஒ-15)

★ ★ ★

தென்மராட்சி,ஜூன்12

உசன் கந்தசாமி கோவில் உற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நாளை வெள்ளிக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவ காலத்தில் கந்த புராண கண்ணோட்[illegible] பற்றி கந்த.சத்தியநாதன் செ[illegible]பொழிவு நிகழ்த்துவார். (ஒ-117)

★ ★ ★

காரைநகர்,ஜூன்12

காரைநகர் திண்ணபுரம் திகரன்பிட்டி வைரவர் ஆலய பொங்கல் உற்சவம் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது.

★ ★ ★

சண்டிலிப்பாய்,ஜூன்12

சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமையும் தீர்த்த உற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன. (ஒ-135)

★ ★ ★

மாதகல் அரசடி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தில் இன்று வியாழக்கிழமை இரதோற்சவமும், நாளை வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. மாதகல் கடற்கரையில் தீர்த்த உற்சவம் நடத்துவதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்12

கொட்டடியம்பதி ஆதிமுத்துமாரி அம்மன் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 5ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து நிகழும் உற்சவங்களில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மாலை 3 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

உற்சவ தினங்களில் தினசரி மாலை 7 மணிக்கு சமயச் சொற்பொழிவும் பஜனையும் இடம்பெற்று வருகின்றன. (ஒ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்12

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நேற்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ரதோற்சவம் இடம்பெறும். (ஒ-ரி)

★ ★ ★

காரணவாய் வடக்கு சாத்தானைப்பதி வீரபத்திர சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-5)


## தேவை

தொலைத்தொடர்பு நிலையத்தில் வேலை செய்ய பெண் ஊழியர். தேவை. கணனி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. உடன் தொடர்புகளுக்கு:

**Modern Net**
125, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்
(நூல்நிலையம் முன்பாக).
(19012)



## தேவை

கணனியில் M/S Office முடித்த, ரிசெப்சனில் செய்யத்தக்க பெண்கள் தேவை.

தொடர்பு:
ரேகா ஓடியோ வீடியோ சென்ரர்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
T.P.: 0777 040120
(19015)

# சமாதானத்துக்கான 'கடைசி பஸ்ஸை' சிங்களத் தரப்பு தவறவிடப் போகிறதா?

தமது கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு பின்னடிக்கும் நிலையில் தொடர்ந்தும் சமாதானப் பேச்சில் பங்கேற்பதில் அர்த்தமில்லை என்பதால் அவற்றில் இருந்து விலகி இருப்பதென விடுதலைப் புலிகள் அமைப்பு தீர்மானித்துள்ளது. இந்த முடிவை ஆராயும் இக்கட்டுரை "ராவய" ஞாயிறு இதழில் வெளிவந்துள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையேயான சமாதானப் பேச்சுகள் முடிவேதும் அற்ற சிக்கல் நிலையை எட்டியுள்ளன. தென்பகுதி அரசியல் குழுக்களிடையே நிலவும் இனவாத சுபாவத்துக்கும், விடுதலைப் புலிகள் அமைப்பின் இறுக்கமான போக்குக்கும் இடையேயான விரிசல் நிலையால் இடை நடுவில் தடைப்பட்டு நிற்கும் சமாதானப் பேச்சுகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாது போய்விடுமோ என்ற சந்தேகம் தோன்றியுள்ளது.

சமாதானத்துக்கான கடைசி 'பஸ்'ஸும் தவறவிடப்பட்டு விட்டதே என்ற துரதிர்ஷ்ட நிலைமை ஏற்பட இன்னும் கால அவகாசம் இருக்கும் நிலையிலும், நிகழ்வுகள் இடம்பெறும் விதத்தை நோக்கும் போது யுத்தம் மீண்டும் உருவாகுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படாதென எவராலும் வாதிட முடியாதுள்ளது. சமாதானப் பேச்சுகளில் இருந்து விலகி இருப்பதென விடுதலைப் புலிகள் அமைப்பு தீர்மானித்தமையாலும் ஜப்பானில் இடம்பெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றுவதை அவர்கள் தவிர்த்தமையாலும், இவ்விரிசல் நிலை மேலும் உயர்வடைந்து செல்வதற்கு காரணமாகிறது. வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபையொன்றினை ஏற்படுத்தவோ அல்லது இடைக்கால நிர்வாக சபையில் விடுதலைப் புலிகள் அமைப்பு பங்கேற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தவோ அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அமைப்பு கோரியது. இதற்குப் பதிலாக ஸ்ரீலங்கா அரசு புனரமைப்பு அதிகார சபையொன்றினை நிறுவும் தீர்மானத்தை முன்வைத்தது. ஆனால், இது விடுதலைப் புலிகள் அமைப்பால் நிராகரிக்கப்பட்டமையால் இவ்விரு தரப்பினரிடையேயும் உருவாகியிருந்த நல்லிணக்க நிலைமை மேலும் பாதிப்புக்கு உள்ளாவதாக எண்ணத் தோன்றுகின்றது. நடைமுறையில் இருந்து வரும் அரசமைப்பு விதிகளின்படி நேரடியான இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்குவது சிரமமானது என்பது அரச தரப்பு வாதமாயிருக்கிறது. அதே வேளை இடைக்கால நிர்வாக அமைப்போ அல்லது இடைக்கால நிர்வாக அமைப்பில் பங்குகொள்ளும் வாய்ப்போ வழங்கப்படாததொரு தீர்வு முயற்சியை தாம் ஏற்றுக்கொள்ள முடியாதென்பது விடுதலைப் புலிகள் தரப்பு வாதமாக அமைகிறது. இவற்றுக்கும் மேலாக, விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசு சர்வதேச சமூகத்தினூடாக விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது அழுத்தம் பிரயோகிக்க முயல்வதாக குற்றஞ்சாட்டியுள்ளார். இதன் மூலம், விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு தரப்பாகவும், சர்வதேச சமூகத்தை மற்றொரு தரப்பாகவும் நிறுத்தி, அதன் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சிரமத்துக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள முயல்வதாக அவர் கருதுவதாகத் தோன்றுகிறது.

இதில் எந்த அளவு உண்மை, பொய் இருப்பினும், இவ்விதமான எண்ணத்துக்கு புலிகளை உட்படுத்தும் சூழ்நிலையை அரசு உருவாக்குவதற்குப் பதிலாக, இச்சமாதானப் பேச்சுகள் தொடர்பாக புலிகளுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளமுயல்வது மிக உகந்த செயலாக அமையும். தாம் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் தனிமைப்படுத்தப்படுகிறோம் என்பது புலிகளது சந்தேகமாக அமையுமானால், இருதரப்பினரிடையேயும் இடம்பெறும் சமாதானப் பேச்சுகளில் தமது கருத்துக்களுக்கு உரிய மதிப்பு வழங்கப்பட மாட்டாது என்பது புலிகளது அச்சமாக அமையக்கூடும். பேச்சுகளின் முடிவில் எட்டப்படும் தீர்மானங்களிலும் சர்வதேச சமூகம் தம் மீது அழுத்தம் மேற்கொள்ளக் கூடும் என புலிகள் கருத இடமுண்டு. எமது அன்றாட சாதாரண பிரச்சினைகளில் கூட, சம்பந்தப்படும் தரப்புக்களுடன் மேற்கொள்ளும் தொடர்புகளில் ஓரிருவர் மத்தியஸ்தத்தில் ஈடுபடுவதற்குப் பதிலாக, சுற்றிச் சூழ அமர்ந்திருக்கும் சகலதுறை வல்லுநர்களும், அப்பிரச்சினையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்படுவதற்கு ஆர்வம் காட்டுவார்களாயின், சம்பந்தப்படும் தரப்புக்கள் சந்தேகமோ, அல்லது கோபமோ கொள்வது புதுமையானதொரு விடயமல்லவே? நீண்ட காலமாக ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த குழுவொன்றுக்கு இவ்வகை அழுத்தங்கள் பயமளிப்பவையாகவும் அமையும்.

இதற்கும் மேலாக, தென்பகுதி அரசியல் அரங்கில் தற்போது நிலவும் குழப்பமான தன்மையும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தற்போதைய நிலைப்பாட்டுக்கு ஒரு காரணம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இடைக்கால நிர்வாக யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தென்பகுதி அரசியல் கட்சிகள், சமஷ்டி அமைப்பொன்றினை உருவாக்குவது தொடர்பாக அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்வதை அனுமதிப்பர் என நம்புவது சிரமமானதே.

உண்மையில் இவ்வினப் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணமே, நடைமுறையிலுள்ள அரசமைப்பின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சட்டங்களும், விதிமுறைகளுமே. நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் தென்பகுதி அரசியற் கட்சிகளால் தாம் அதிகாரத்தில் இருந்த வேளையில் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டங்களால் வடக்குக் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த சிறுபான்மை மக்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்படவில்லை என்பது அவர்களது கருத்தாகும். இப்பிரச்சினை வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு தனியானதொரு நிர்வாகம் வழங்கப்பட வேண்டுமெனக் கோரும் அளவுக்கு வளர்ச்சியுற்றது. அதற்காக வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு அரசமைப்பையே முற்றுமுழுதாக மாற்றியமைக்க வேண்டுமென வாதிட இயலாது. அதற்கான மிகப் பொருத்தமான நடவடிக்கையாக இன்று அமையக் கூடியது இடைக்கால நிர்வாக சபையொன்றினை உருவாக்குதலேயாகும். அவ்விதம் இடைக்கால நிர்வாக சபையொன்றினைக் கூட உருவாக்க இயலாத அரசொன்றுடன் பேச்சு மேற்கொள்வதன் மூலம் எதுவித பலனும் ஏற்படப் போவதில்லை என விடுதலைப் புலிகள் அமைப்பு கருத... டும். இவ்விடயத்தில் முழுத்தவறு அதிகாரத்திலுள்ள அரசினுடையதுதானெனவும் வாதிட முடியாது. எதிர்க்கட்சிகளின் ஆதரவு இல்லாமல் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ள இயலாதென்பது உண்மையே. ஆனால், நீண்ட காலமாக யுத்தத்தில் ஈடுபட்டிருந்த அமைப்பொன்றினை தென்பகுதியைச் சேர்ந்த சகல அரசியல் குழுக்களும் ஒன்றிணைந்து ஓர் அரசியல் தரப்பாக ஏற்றுக் கொள்வாரென எதிர்பார்க்கவும் இயலாது. ஆனாலும், சமாதானப் பேச்சுகள் எவ்வளவு காலம் தொடர்ந்து இடம்பெற்றாலும், இனப்பிரச்சினை தொடர்பாகத் தென்பகுதி அரசியல் கட்சிகளிடையே ஒத்த கருத்தினைக்கம் காணப்பட்டால் மட்டுமே இறுதி முடிவொன்றினை எட்ட இயலும். கடந்த 50 வருட கால அரசியல் வரலாற்றில ஸ்ரீலங்காவின் அரசியலில் இவ்வித ஒத்துப்போகும் தன்மை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிலவியதில்லை. அரசை நிர்வகிக்கும் கட்சி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்பட்ட வேளைகளிலெல்லாம், எதிர்க்கட்சியாய் இயங்கியவர்கள் அம்முயற்சிகளில் ஏதோவொரு குறை கண்டுபிடித்து, அதனை எதிர்ப்பது ஸ்ரீலங்கா அரசியலில் வழக்கமாகவே இடம்பெற்று வந்துள்ளது. தற்போது இடம்பெறுவதும் அவ்வகையான நிலைமையே. அதிகாரத்தில் இருப்பவர் தமது ஆட்சிக்காலத்திலேயே இந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டதென்ற பெருமையை அடைய விழையும் அகங்கார எண்ணத்தைக் கொண்டிருப்பது போன்று, எதிர்க்கட்சியாகச் செயற்படுவோர் அரசியல் இலாபம் அடையும் நோக்கில், எதிர்காலத்தில் தாம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான துருப்புச் சீட்டாக இந்த இனப்பிரச்சினையைப் பயன்படுத்த முயல்வதை நம் நாட்டு அரசியல் அரங்கில் எம்மால் அவதானிக்க முடிந்துள்ளது. ரணிலின் தற்போதைய ஐ.தே. முன்னணி அரசு கூட, எதிர்க்கட்சிகளின் பங்களிப்புடன் இந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியை மேற்கொள்ள உண்மையான உற்சாகம் காட்டுவதாகத் தோன்றவில்லை. சமாதான சகவாழ்வு என வார்த்தையளவில் பேசப்படுகிறதே தவிர, அதனை யதார்த்தமாக நிறைவேற்றிப் பார்க்கும் நடவடிக்கையில் தென்பகுதி அரசியலில் உள்ள இரு தரப்பினரில் எவரும் ஈடுபாடு காட்டவில்லை.

சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் அரசு முன்னெடுக்கும் இத்தீர்வு முயற்சிகள் குறித்து சந்திரிகா கூட எவ்வித அக்கறையும் காட்டவில்லை. சந்திரிகாவின் இந்த இரட்டை வேட நடிப்பு விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேகம் மேலும் வலுவடைவதற்குக் காரணமாய் அமைகின்றது. தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பின் கீழ் நடத்தப்படும் பொதுத் தேர்தலில் எக்கட்சியும் நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அங்கத்துவ பலம் பெற்றுக்கொள்ள இயலாத தன்மை, அரசமைப்பில் வேண்டிய திருத்தம் மேற்கொள்வதற்காக அரசு மற்றும் எதிர்த்தரப்பினர் இணக்கப்பாடொன்றினை எட்டுவதற்குக் காட்டும் அசிரத்தைப் போக்கு ஆகியவை விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் தென்பகுதி அரசியலுக்குமிடையே நிலவிய நெருக்கம் வெகு தூரத்துக்கப்பால் விலகிச் செல்லக் காரணங்களாய் அமையுமெனக் கூறுவது தவறாகாது.

இனப்பிரச்சினை விடயத்தில் வேளைக்கு வேளை தாம் விரும்பிய விதத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளும் நாடக மேடை நடிப்பு தென்பகுதி அரசியல் கலாசாரத்தை நிர்மூலமாக்கும் செய்கையாக அமைகிறது.

எவ்வாறான போதும், விடுதலைப் புலிகள் அமைப்பு இச்சமாதானப் பேச்சுகளினின்றும் ஒதுங்கியிருப்பது பாரதூரமான சம்பவத்துக்கானதொரு சைகையாகத் தோன்றுவதாகச் சந்தேகிக்க வேண்டியுள்ளது. சர்வதேச சமூகம் இப்பிரச்சினையின் போக்கை அவதானித்த வண்ணம் இருந்த போதும், மீண்டும் யுத்தமொன்றில் ஈடுபடமாட்டோமென விடுதலைப் புலிகள் அமைப்பு உறுதியளித்திருந்த போதும், எதிர்வரும் நாளகளில் இப்பிரச்சினை என்ன வகையில் கையாளப்படவுள்ளதென எவராலும் கூற முடியாதுள்ளது. சமாதான பேச்சுகள் தொடரப்படுமா? அல்லது மீண்டும் யுத்தம் ஆரம்பமாகுமா? அல்லது எவருக்கும் வெற்றியோ, தோல்வியோ இல்லை என்ற வகையில் நாட்டில் நீண்டதொரு கால இடைவெளிக்கு இன்றைய நிலையே பேணப்படுமா? என்பதை எவராலும் தீர்மானிக்க முடியாதுள்ளது. ✸

**வீயெஸ்ரீ**




---

சட்ட விரோதமாக அகழப்பட்டதால்

## பறிமுதல் செய்யப்பட்ட மணல் கோயில், பாடசாலைகளுக்கு

### வழங்க சாவகச்சேரி நீதிவான் பணிப்பு

தென்மராட்சி,ஜூன்12

அனுமதிப்பத்திரமின்றி சட்ட விரோதமாக வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்ட மணல் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டது. அந்த மணலை பாடசாலை மற்றும் ஆலயங்களின் புனரமைப்புப் பணிகளுக்கு வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த மூன்று லொறிகளை சாவகச்சேரிப் பொலிஸார் கைப்பற்றினர். அந்த லொறிகளில் மணல் ஏற்றி வந்தோர் மீது பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கினை விசாரித்த நீதிவான் க.அரியநாயகம் சட்ட விரோதமாக மணல் ஏற்றிவந்தோருக்கு தலா 3ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். மணலைப் பறிமுதல் செய்து புனரமைப்பு பணி இடம்பெறும் பாடசாலைகள் மற்றும் ஆலயங்களுக்கு வழங்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ரோந்து சென்ற பொலிஸார் மீசாலைப் பகுதியில் வைத்து, இந்த லொறிகளைக் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-117)

---

## பிரதேச சபைக்கு வாகனம் தர கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்12

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அவசர சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள வாகன வசதி இல்லாமையால் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பகுதிகளில் உள்ள சந்தைகள் மற்றும் குடிதண்ணீர் வசதியற்ற கிராமங்கள் ஆகியவற்றுக்கு குடிதண்ணீரை விநியோகிக்கவும் வாகன வசதி இல்லாதுள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டு தமது சபைக்கு நான்கு சில்லு உழவு இயந்திரம் ஒன்றை வழங்குமாறு பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளருக்கு சபையின் செயலாளர் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த உழவு இயந்திரம் கிடைக்கப் பெற்றால் பல அத்தியாவசிய தேவைகளை இலகுவாகப் பொது மக்களுக்கு வழங்க முடியும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஓ-10-185)

---

## கிராமங்களின் முன்னேற்றத்துக்கு இளையோரின் பங்களிப்பு அவசியம்!

### கருத்தரங்கில் ரவிராஜ் எம்.பி. உரை

கைதடி,ஜூன்12

எந்தவொரு கிராமத்தின் முன்னேற்றத்துக்கும் அக்கிராமத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பே பிரதானமாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ்.

கைதடி மக்கள் நலன்பேணும் கூட்டுறவுக்கழகத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட பயிற்சிக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டுறவுக்கழகத்தின் தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்வித்தரத்திலும் வாழ்க்கைத் தரத்திலும் கீழ்நிலையில் உள்ள கிராம மக்களுக்கு இளைஞர், யுவதிகள் உதவிகள் புரியவேண்டும். ஒரு சமூகத்தை விழிப்புணர்வுடையதாக மாற்றுவதற்கும் இளைஞர், யுவதிகளாலேயே முடியும் என்றார் ரவிராஜ் எம்.பி.

இந்த நிகழ்வில் வேலணை பிரதேச செயலக சமுகசேவை உத்தியோகத்தர் எஸ்.தவேந்திரன், சாவகச்சேரி மக்கள் வங்கி அலுவலர் கே.சிறிதரன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் கைதடிப் பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களான சுமார் 50 இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். (ஓ-10-75)

# வீணியவரை செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூன்12

மாவிட்டபுரம் வீணியவரை அம்மன் கோயிலின் வைகாசிப் பொங்கல் விழாவை இன்று வியாழக்கிழமை நடத்த படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளதாக ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார்.

இப்பொங்கலில் பங்குபற்ற விரும்பும் பக்தர்கள் இன்று காலை 8 மணிக்கு தெல்லிப்பழை தடை முகாமுக்கு வரும்படியும் அவர் கேட்டுள்ளார். (ஒ-3)


## யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் சாதனைகளை பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கல்வியில்:-**

1. 2002 க.பொ.த. (சா/தர) பரீட்சையில் 72% மாணவர்கள் க.பொ.த. (உ/த) கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளமை.

**விளையாட்டுத் துறையில்:**

வலைப்பந்தாட்டத்தில் - மாவட்ட மட்டத்தில்

19 வயதுப் பிரிவு முதலாம் இடம்

15 வயதுப் பிரிவு இரண்டாம் இடம் பெற்றுத் தொடர்ந்து கடந்த 7 ஆண்டுகளாக மாகாண மட்டப் போட்டியில் கலந்து கொள்கின்றமை.

**கரபந்தாட்டத்தில்:**

15 வயதுப் பிரிவினர் முதன்முதலாக மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொள்கின்றமை.

கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் மேற்படி சாதனைகளைப் படைத்து எமது கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் மாணவர்களையும், இச்சாதனைகளுக்கு வழிகாட்டும் அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், ஆசிரியர்களையும் அவர்கள் பணி சிறக்க நன்றியுடன் பாராட்டி வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்.
கனடாக் கிளை.

(19041)



## JAFFNA SOCIAL ACTION CENTER

159, 4th Cross Street, Jaffna. T.P. 222 3699

**Vacancy for the following post:-**

1. PROJECT OFFICER
Required Qualification
*Secondary Education
* Experience -
i. Minimum of 25 years working in the area of Social Services , Development and / or Gender issues
ii.Some relevant experience in working with vulnerable members of the community
* Committed to social justice and assistance for vulnerable women
* Very good communication & Problem solving skill
* Preference will be given to those from Thenmaradchy.

*Please submit application to the above address on or before June 20th 2003.*

Co-ordinator ,
JSAC. (C/28367)



## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 17 - 09 - 1941



உதிர்வு 03 - 06 - 2001

அமரர் Lion Dr. த. அருளைமைத்துரை (R.M.O.)
(முன்னாள் பொறுப்பதிகாரி, நவாலி அரசினர் வைத்தியசாலையும் மகப்பேற்று நிலையமும்)

திதி: 12-06-2003

ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
அழியாது உங்கள் நினைவு
மண்ணுக்குள் சென்றாலும் - எங்கள்
நெஞ்சத்தில் வாழ்கின்றீர்கள்!

என்றும் நீங்கா நினைவுடன்:
குடும்பத்தினர்.

அருமலை வடக்கு,
மானிப்பாய். (19036)


# சிறுவர்களின் கண்களைப் பாதுகாக்க......!

சிறுவர்கள் பெரும்பாலும் சோம்பிக் கிடக்காமல் உற்சாகத்துடன் ஓடி விளையாடுவார்கள் ஆனால் இந்த உற்சாகம் அவர்களுக்கு சமயங்களில் தீங்கை ஏற்படுத்தவும் கூடும்.

அத்தகைய தீங்குகளில் ஒன்று சுண்ணாம்பு போன்ற பொருள்கள் சிறுவர்களின் கண்ணில் பட்டு பாதிப்பு ஏற்படுவதாகும். அதிலும் சுண்ணாம்பாலேயே சிறுவர்களின் கண்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

வெற்றிலைக்கான சுண்ணாம்பு தற்போது சிறிய பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு விற்கப்படுகிறது. விளையாட்டுத்தனமாக அவற்றை அழுத்தும்போது அவை வெடித்து சுண்ணாம்பு சிதறுகிறது. இதில் சிறுவர்களின் கண்களில் சுண்ணாம்பு பட்டுவிடும் சந்தர்ப்பம் உண்டு. பெரியவர்களின் கண்களில் சுண்ணாம்பு பட்டாலும்கூட மோசமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புக் குறைவாகவே உள்ளது. ஆனால், சிறுவர்களின் கண்களில் சுண்ணாம்பு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பொதுவாக திருமணம், மரணச்சடங்கு போன்ற சடங்குகள் நடைபெறும் இடங்களில் இத்தகைய அசம்பாவிதங்கள் ஏற்படுவது உண்டு.

இவ்விடயங்களில் சுண்ணாம்புப் பைக்கற்றுக்கள், அதிக அளவில் போதிய பாதுகாப்பின்றி வெற்றிலைத் தட்டங்களில் கிடப்பதாலும், பெற்றோர் இத்தகைய சடங்குகளின் போது பிள்ளைகளை போதிய கவனிப்பின்றி விளையாடவிடுவதாலும் இவை சம்பவிக்கின்றன.




வெற்றிலை போடுபவர்களின் வீடுகளிலும் வெற்றிலைத்தட்டுடன் சுண்ணாம்பு பைக்கற்றுக்கள் கிடப்பதால் அசம்பாவிதங்கள் சம்பவிக்க இடமுண்டு.

### முதலுதவி

சுண்ணாம்பு ஓர் இரசாயனப் பொருள். இது கண்களில் ஒட்டிக் கொண்டு இருக்கும்வரை, அதன் தாக்கம் கண்ணுக்கு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். எனவே, அதை கூடிய விரைவில் கண்ணிலிருந்து அகற்ற வேண்டும் அல்லது அது ஐதாக்கப்பட வேண்டும். இதை முதலுதவிச் சிகிச்சை மூலம் செய்யலாம்.

பாதிக்கப்பட்டவரை இருக்க வைத்து அல்லது படுக்கவைத்து முதலுதவி அளிக்கலாம்.

பாதிக்கப்பட்ட கண்பக்கமாகத் தலையை திருப்பிவைத்துவிட்டு மூக்கு ஓரமாக பாதிக்கப்பட்ட கண்ணுக்கு மென்சூட்டு நீரை அல்லது சுத்தமான தண்ணீரை நிறைய ஊற்றவேண்டும். தலை திருப்பி வைத்திருப்பதால் கண்ணைக் கழுவிக்கொண்டு வெளியேறும் சுண்ணாம்பு கலந்த நீர் மற்றைய கண்ணைப் பாதிப்பதிலிருந்து தவிர்க்கலாம்.

நீரை ஊற்றும் போதும் கண் இமைகளைத் தொடர்ந்து திறந்து மூட வேண்டும். இதனால் இமையின் மடிப்புக்குள் மறைந்திருக்கும் சுண்ணாம்புத் துகள்களை வெளியேற்ற முடிகிறது. தொடர்ந்து பத்து நிமிடங்களேனும் இவ்வாறு கண்ணைக் கழுவ வேண்டும்.

முதலுதவிச் சிகிச்சை முடிந்த உடனேயே கண்வைத்திய நிபுணரிடம் அல்லது இத்துறையில் பயிற்சி உடைய டாக்டரிடம் காட்டி விறைப்பு மருந்துபோட்டு சுண்ணாம்புச் சிதறல்களை கண்ணிலிருந்து அகற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும். ★

## பிணையாளிக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஜூன்12

கசிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றில் ஆஜராகத் தவறியதையடுத்து அவருக்கு பிணையாளியான அவரது மனைவியை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கசிப்பு வழக்கொன்றில் சம்பந்தப்பட்டிருந்த யாழ்.வைத்தீஸ்வராச் சந்தியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் வாஸ் என்பவர் நீதிமன்றில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வருகிறார். இதனால், எதிரியை நீதிமன்றில் ஆஜர் செய்யத் தவறியமைக்காக அவரை முன்னர் பிணையில் நின்று விடுவித்த மனைவியான வாஸ் சுபாசினி என்பவரை பிணைப்பணமாகிய 5ஆயிரம் ரூபாவை அரசுடைமையாக்கி அதனை அவர் செலுத்தும்வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (ஒ-8)

## பாம்பு தீண்டி குடும்பஸ்தர் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூன்12

வீட்டில் தங்கியிருந்த வேளை பாம்பு தீண்டிய குடும்பஸ்தர் சிகிச்சைக்குக் கொண்டுவரப்படும் போது வழியில் மரணமடைந்தார்.

நேற்றுமுன்தினம் சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஐயாக்குட்டி செல்வராசா(வயது37) என்பவரே மரணமடைந்தவராவார்.

## தாபரிப்பு வழங்காத நபருக்குச் சிறை

யாழ்ப்பாணம்,ஜூன்12

தாபரிப்புப் பணத்தைச் செலுத்தத் தவறிய ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் மோத கடூழிய சிறைத்தண்டனை விதித்தது.

அச்சுவேலி, கதிரிப்பாயைச் சேர்ந்த மேற்படி நபர் விவாகரத்தின் பின்னர் தனது மனைவிக்கு வழங்க வேண்டிய 3ஆயிரம் ரூபா தாபரிப்புப் பணத்தைச் செலுத்தத் தவறியமைக்காக யாழ்நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா அவருக்கு மோத கடூழிய சிறைத்தண்டனையை விதித்துள்ளார். (ஒ-8)

## ஆலயம் புனரமைப்பு

வடமராட்சி,ஜூன்12.

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்தக் கடற்கரை கிருஷ்ணன் கோயில் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு நாட்டி வைக்கவுள்ளார்.

கற்கோவளம் கடற்கரையோரத்தில் இக்கோவில் அமைந்துள்ளது. (ஒ-173)


## விற்பனையாளர்கள், கணக்காளர்கள் தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் பான்ஸி கடைக்கு ஆர்வமுள்ள ஆண்,பெண் விற்பனையாளர்களும் கணனி அனுபவமும் கணக்கியல் அனுபவமும் உள்ள கணக்காளர்களும் தேவை.

சொந்தக் கையெழுத்திலான சுயவிவரங்களுடன் உடனே விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 1926,
மே/பா உதயன்.

(19040)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 04 - 09 - 1949



இறப்பு 13 - 05 - 2003

அமரர்
பஞ்சரட்ணம் புஸ்பரட்ணம் (S.M.)

அன்புக்கும் பண்புக்கும் இருப்பிடமாயிருந்தீர்!
ஆதரவாய் எமை வளர்த்துக் காத்து ஆளாக்கினீர்!
இன்று உமது நினைவால் இதய அஞ்சலி செலுத்துகிறோம்.
*ஆத்மா சாந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (12.06.2003)வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*184, கண்டி வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (19037)

- குடும்பத்தினர்.





சாமியே சரணம் ஐயப்பா.

காரைநகர் பாலாவோடை குறிஞ்சாக்குளி

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

இன்று இரதோற்சவம்

12.06.2003




அம்பிகை அடியார்களே!

ஐயப்பான் குடிகொண்டிருக்கும் ஈழத்துச் சிதம்பரத்தைத் தன்னகத்தே கொண்ட காரையம்பதி குறிஞ்சாக்குளி வீரத்தாய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் சித்திரத்தேரில் ஆரோகணித்து அருள்மழை பொழியும் கண்கொள்ளாக் காட்சியைக் காண வாருங்கள்! வந்து கூடுங்கள்!!
மங்கள வாத்தியங்கள் முழங்க, அரோகரா கோஷம் வானைப் பிளக்க "தாயே சரணம்" என்று மெய்மறந்து நிற்கும் அடியார் கூட்டம் காணக் கண்கோடி வேண்டும்.

அடியார்கள் வருக! அம்மன் அருள் பெறுக!!

- கனகசபை சுந்தரலிங்கம்
(காரை மணிகண்டன்)

(19038)



'நியாப்' திட்டத்தின் கீழ் இருபாலை தெற்கு, செம்மணிக்குளத்தைப் புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் கல்வியங்காடு கலைமணி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. அதில் கோப்பாய் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் உரையாற்றுவதையும் -

'நியாப்' திட்ட அதிகாரி கே.பாலகிருஷ்ணன், யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சின்னத்துரை, உலகவங்கியின் பிரதிநிதிகளான நிகால் பெர்னாண்டோ, எஸ்.ஜெகநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:-வலி. கிழக்கு செய்தியாளர்)*

# குளங்கள், வடிகால்களின் விவரம்; 'நியாப்' அலுவலகம் சேகரிக்கிறது

## திணைக்களங்களிடம் கோரிக்கை

யாழ்.குடாநாட்டில் இந்த ஆண்டில் புனரமைப்புச் செய்யப்படவுள்ள குளங்கள் மற்றும் வடிகால்கள் தொடர்பான விவரங்கள் யாவும் யாழ்மாவட்ட நியாப் அலுவலகத்தினால் சேகரிக்கப்படுகிறது.

இதற்கமைய இந்த விவரங்களைத் தனித்தனியே முன்னுரிமை அடிப்படையில் வழங்குமாறு பிரதேச செயலகங்கள், நீர்ப்பாசனத் திணைக்களங்கள், விவசாய மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களங்களிடம் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் குளங்கள் மற்றும் வடிகால்கள் வேறு நிறுவனங்களால் நிதி வழங்கப்படாதவையாகவும் - கடந்த ஐந்து வருடங்களுக்குள் புனரமைக்கப்படாதனவாகவும் - இருக்க வேண்டும்.

இந்த ஆண்டுக்கான திட்டத்தை ஆரம்பிப்பதில் ஏற்பட்ட தாமதமும் விரைவில் வேலைகளை நிறைவு செய்ய வேண்டிய கட்டாயமும் இருப்பதால் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களங்களை நியாப் திட்டப்பணிப்பாளர் கோரியுள்ளார்.

(ஓ-10-49)

## சாயி சிந்தனை

### இல்லத்திற்கு ஆதாரம்



பெண்கள் இல்லாத இல்லம் வெறும் மடம் போல் காட்சியளிக்கும். சத்திரம் போல் காணப்படும். ஆகவே முதலில் பெண்கள் தாங்கள்தான இல்லத்திற்கு ஆதாரம் எனப் புரிந்துகொள்ள வேண்டும். தனது குழந்தையை கவனமாகப் பார்த்துக் கொள்வதுடன் தனது கணவனின் நலத்தில் மிகுந்த அக்கறை கொள்ளவேண்டும். இதற்குப் பிறகு அவர் எந்த வேலை வேண்டுமானாலும் செய்யலாம். இது புராதனமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் வாழ்க்கைமுறை.

ஆனால், எல்லாம் தற்போது எதிரிடையாக மாறிப்போய் விட்டது. பெண்கள் தங்களை சமையலறைக்குள் அடைத்து கொள்ள வேண்டுமென சிலர் நினைக்கின்றனர். ஒருபெண் தன் இல்லம் முழுவதையுமே விரும்புபவள். பெண்கள் சரியாக இருந்தால்தான் குழந்தைகளும் நல்லபடியாக வளர்வார்கள். ஆண் ஒரு பெண்ணை கண்ணீர்சிந்தும்படி நடத்தக் கூடாது. வீட்டிலிருந்து ஒரு பெண் கண்ணீர் சிந்தினால் இல்லத்துச் செல்வம் எல்லாம் மறைந்து போய்விடும். ஆகவே ஒருபெண் கண்ணீர் சிந்தாமல் பார்த்துக் கொள்வது ஆணின் கடமை.

(ஆதாரம்:- சனாதன சாரதி)

## சுன்னாகத்தில் நடந்த விபத்தில்

# குழந்தையுடன் வந்தோரை மோதிய மோ.சைக்கிள் சாரதி தலைமறைவு!

கைக்குழந்தையுடன் சைக்கிளில் வந்த தம்பதியை மோட்டார் சைக்கிளில் வந்த நபர் மோதிச் சாய்த்து விட்டு ஆள்கள் கூடியதை சாதகமாகப் பயன்படுத்தி தப்பிச் சென்றார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 6.00 மணியளவில் சுன்னாகம் சந்திக்கு சமீபமாக இச்சம்பவம் இடம்பெற்றது.

இடம்பெயர்ந்து மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை முகாமில் தங்கியுள்ள இருகால்களையும் இழந்த பெண்மணி தனது கணவர் சைக்கிளைச் செலுத்த ஐந்து மாதக் கைக்குழந்தையுடன் அதிலிருந்து பயணித்தார். அப்போது யாழ்ப்பாணம் நோக்கி நபர் ஒருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள், தம்பதியர் வந்த சைக்கிள் மீது மோதியது.

இந்த விபத்தைக் கண்ட பொதுமக்கள் விழுந்தவர்களுக்கு உதவி செய்வதில் கவனம் செலுத்தினர். இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி மோட்டார் சைக்கிளுடன் அதில் வந்தவர் தலைமறைவானார்.

விபத்து நடந்த சமயத்தில் பொலீஸார் அவ்விடத்தில் நின்ற போதிலும் விபத்துக்குக் காரணமானவர் மீது நடவடிக்கையெடுக்கத் தவறி விட்டதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

(ஓ-86)

## சட்டமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்துக்கு சட்டமாணி கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

விண்ணப்பப் படிவங்கள் தேவைப்படுவோர் அவற்றை 250 ரூபா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என்று நிலையத்தின் இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் இறுதித்தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஜி.சி.ஈ. உயர்தரப பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-10)

# புனர்வாழ்வுக்கான நிதிகளை வீணடிக்கும் மீள்நியமனங்கள், நிர்வாகச்செலவுகள்

வடக்கு, கிழக்கு புனர்வாழ்வுக்கென வரும் நிதியில் கணிசமான பகுதி நிர்வாகச் செலவுகளுக்கே பயன்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கென பல்வேறு திட்டங்களை முன்வைத்து உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் பல வெளிநாடுகளிடமும் சர்வதேச நிதி நிறுவனங்களிடமும் இருந்து நிதியைப் பெற்று வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும்.

ஆனால், இவ்வாறு பெறப்படும் நிதியின் அளவோ அல்லது திட்டத்தின் முழு விவரங்களோ இன்று வரை சீராக வெளியிடப்படுவதில்லை என்று பொதுமக்கள் தரப்பில் குறை கூறப்படுகிறது.

இது தொடர்பாக விசாரித்த போது உதவித்திட்டங்களுக்காக கிடைக்கும் பணத்தில் பெரும் பகுதி திட்டங்களை செயற்படுத்தும் நடவடிக்கை




களில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான சம்பளம், போக்குவரத்து, தங்குமிட வசதியென்று நிர்வாகச் செலவுகளுள் உள்ளடக்கப்படுவதாக அறிய முடிகிறது.

குறிப்பாக வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர், மலசல கூடப் பயன்பாட்டிற்கான பொருள்கள் உட்பட பல தேவைகளுக்கு உதவி நிதியின் குறிப்பிடத்தக்க பகுதிசெலவிடப்படுகிறது. அடிபட்டு உதைபட்டு உறவுகளை இழந்து ஊனமுற்று வீடு, வாசல், சொத்துகளை இழந்து தவிக்கும் தமிழர்களுக்காக வரும் நிதி உண்மையில் அவர்களுக்கு எந்த அளவில போய்ச் சேருகிறது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

புனரமைப்பு, புனர்வாழ்வுக்கெனப் பெறப்படும் பணத்தில் எத்தனை வீதம் உண்மையில் மக்களைச் சென்றடைகின்றது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் என்று கூறிக்கொள்ளும் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள்தான் இப்படி என்றில்லை. தற்போது அரசின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் ஊடாக வரும் நிதியும் கூட நிர்வாகச் செலவுக்குப் பயன்படுத்துகின்ற நிலைமை மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தி வருகின்றது.

இத்தகைய நடவடிக்கையில் வெளிநாட்டவர் ஈடுபடுவதைக் கூட ஜீரணிக்கமுடியும். ஆனால், அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு என்று பத்திரிகை அறிக்கைகளை விட்டுக் கொள்ளும் தமிழர்களான உயர் அதிகாரிகள் தமக்கு வேண்டிய ஓய்வு பெற்றவர்களுக்கு சம்பளம் கொடுக்க இந்த நிதியைப் பயன்படுத்துவதே வேதனையான விடயமாகும்.

வடக்கு கிழக்கில் கடந்த இரு தசாப்தங்களாக இடம்பெறும் யுத்தம் காரணமாக தொழில் வாய்ப்பில் - பதவி உயர்வுகளில் - தமிழ் இளைஞர், யுவதிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேநேரம் போரைக் காரணம் காட்டிக் கொண்டு - பல்வேறு வகைகளிலும் அரசுக்கு முண்டு கொடுத்தபடி - தங்கள் பதவி உயர்வுகளையும் மற்றும் வசதிகளையும் அதிகரித்துக் கொள்வதிலேயே பெரும்பாலான அதிகாரிகள் கவனம் செலுத்துவதாகவே பொதுமக்கள் நம்புகின்றனர்.

ஆனாலும், 'கறந்தபால் முலைக்கு ஏறாது' என்பது போல அன்று நடந்தவை நடந்தவையாக இருக்க, எதிர்காலத்தில் நடப்பவையேனும் நல்லவையாக அமைய வேண்டும் என்பதில் யாருக்கும் இரண்டாவது கருத்து இருக்க முடியாது. ஆனால், இன்று நடப்பவை 'பழைய குருடி கதவைத் திறவடி' என்பதாகவே உள்ளது.

இராணுவ நலனுக்கு முண்டு கொடுத்தவர்களையும் மக்களின் பணத்தை சுரண்ட உறுதுணையாக இருந்த உத்தியோகத்தர்களையும் மீண்டும் புனர்வாழ்வு, புனரமைப்பு நிதியில் இருந்து சம்பளம் கொடுத்து மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்தும் நிலை இன்றும் தொடர வேண்டிய அவசியம் என்ன? என்பதே மக்களின் கேள்வியாகும்.

இந்த ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் இம் மண்ணில் வாழும் மக்களின் நல் வாழ்வுக்காக - விடிவுக்காக - ஆற்றிய சாதனைகள் என்ன என்பது அடுத்த கேள்வியாகும்.

இத்தகையவர்களை வடக்கு கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்புக்கு வரும் நிதியில் இருந்து சம்பளம் கொடுத்து வைத்திருப்பதிலும் பார்க்க அடுத்த பதவி நிலையில் உள்ளவர்களை பயன்படுத்தி உரிய கடமைகளை செய்ய முடியாதா?

அத்துடன் அரசின் பொறுப்பற்ற செயல்பாட்டுக்கு - அதாவது தமிழ் பிரதேசங்களில் உரிய அலுவலர்களை நியமனம் செய்யாமல் இந்த சமாதான காலத்திலும் மெத்தனம் காட்டுவதற்கு, இத்தகைய செயல்பாடு உறுதுணையாக அமையாதா?

மத்திய அரசு தென்பகுதியில் உள்ள பதவி வெற்றிடங்களை பெரும்பாலும் நிரப்பி விடுகிறது. அதிலும் குறிப்பாக அகில இலங்கை ரீதியான நியமனங்களில் எமது பகுதிக்கு கிடைக்க வேண்டிய நியமனங்களைக்கூட தென்பகுதியினரைக்கொண்டு நிரப்பி வைத்துள்ளது.

ஆனால், வடக்கு, கிழக்கில் உள்ள உயர் அதிகாரிகள் தமது நலனையும் தமது சுற்றுவட்டத்தின் நலனையும் கருத்தில்கொண்டு தமிழ் இனத்தின் இளைய தலைமுறையினரை விரக்தியின் விளிம்புக்குத் தள்ளிச் சென்று கொண்டுள்ளனர்.

உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் கூட தமக்கு ஆளணியினரைச் சேர்க்கும் போது அரச உயர் பதவிகளில் கடமையாற்றி ஓய்வூதியம் பெற்ற முதியவர்களை இணைத்துக் கொள்வதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்.

கிராம மட்டத்தில் புள்ளிவிவரங்களை திரட்டும் செயல்பாடுகளில் சகல அரசசார்பற்ற நிறுவனங்களும் கிராம அலுவலர்களைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், அவர்களுடைய திட்ட முன்மொழிவு அறிக்கையில் தகவல்கள் திரட்டுதல் சம்பந்தமாக செலவுக் கணக்கே காட்டப்படுகின்றது. கிராம அலுவலர்கள் மூலம் தகவல் திரட்டப்பட்டதாக எச்சந்தர்ப்பத்திலும் எழுதப்படுவதில்லை. அதிலும்விவரங்களைத் திரட்டும் பணியில் ஈடுபடும் கிராம அலுவலர்களுக்கு காகிதாதிகளோ அன்றி எழுதுகருவிகளோ கூட வழங்கப்படுவதில்லை என்பதே வியப்பான விடயமாகும்.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இந்த விடயத்தில் ஒத்துழைப்பதால் தானோ என்னவோ உயர் அதிகாரிகள் பலருக்கு ஓய்வுபெற்ற பின்னர் அரசு சார்பற்ற நிறுவனங்களில் இலகுவாகப் பதவி கிடைக்கிறது.

இங்கு ஒரு விடயத்தை சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. கடந்தாண்டு வலி.வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் தங்கிவாழும் மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு குழாய்க் கிணறு அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. உரிய திணைக்களத்திற்கு பிரதேச செயலகத்தினால் இந்த வேலை பூர்த்தியடைந்து விட்டதாக உறுதிச்சிட்டையும் உரிய உயர் அதிகாரியினால் அனுப்பி வைக்கப்பட்டது.

ஆனால், தற்போது அந்த நலன்புரி நிலையத்தில் உள்ளவர்களிடையே இது சம்பந்தமான தகவல்கள் கசியத் தொடங்கின. இதனையடுத்து உரிய முகாம் பொறுப்பாளரை அணுகிய பின், 'கிணற்றுக்கான ஒரு தொகுதிப்பணம் உண்டு. அதனை வந்து பெற்றுச்செல்லுங்கள்' என்று நயமாக வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இத்தகையவர்கள் மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றியே மீண்டும் புனர்வாழ்வு, புனரமைப்பு நிதியில் இருந்து சம்பளம் கொடுத்து நியமனம் செய்யப்பட்டுள்ளமை வேடிக்கையானதாகும்.

இதைவிட வேடிக்கையான சம்பவம் ஒன்றும் நடந்துள்ளது. அண்மையில் இந்து கலாசார அமைச்சு கோவில்களுக்கு இடையே போட்டி ஒன்றை நடத்தியது. இப்போட்டியில் கண்காணிப்பாளர்களாக கலாசார உத்தியோகத்தர்களை அமைச்சு ஈடுபடுத்தியது.

இதில் ஒரு கலாசார உத்தியோகத்தர் கோவில்களுக்குச் சென்று பார்வையிட்டு அறிக்கையை மேலதிகாரியின் ஒப்பத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

அந்த பட்டியலில் தான் சார்ந்த ஆலயத்தின் பெயரை இடைச்செருகலாக அந்த அதிகாரி எழுதிக் கையொப்பம் இட்டுக்கொடுத்துள்ளார். இந்து மாநாடு நடைபெற்ற போது எழுச்சி நிகழ்வு நடத்திய கோவில்கள் எல்லாம் 'நாமம்' போட்டுக்கொள்ள அதிகாரியின் கோவில்களுக்கு அடித்தது அதிர்ஷ்டம். இந்த அலுவலர் இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது அடையாளம் காட்டுவதில் கைகொடுத்தவர் என்று பொதுமக்கள் கூறுகின்றார்கள்.

'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பது போன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட அரசும் புலிகளும் உண்மை நிலையை உணர முடியாத நிலையில் இருக்க உயரதிகாரிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றார்கள் எனவும் பொது மக்கள் கூறுகின்றார்கள்.

### வில்லவன்

இனியாவது அரச சார்பற்ற நிறுவனங்கள் மட்டுமன்றி அரச அலுவலகங்களும் புனரமைப்புக்காகக் கிடைக்கும் நிதியை நிர்வாகச் செலவாக வீணடிக்காது செயற்பட வேண்டும்.

இதேவேளை, அடுத்த பதவித் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களை பதவி உயர்த்தி பணிகளை மேற்கொள்வதன் மூலம் கீழ்நிலையில் உள்ளவர்கள் முன்னுக்கு வரவும் வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பைப் பெறவும் வழிவகுக்க வேண்டும்.

ஆகவே, சமகாலத்தில் உள்ளவர்களும் திறமையானவர்கள் என்பதை உணர்ந்து அவர்களிடம் பொறுப்புகளைக்கொடுத்து புனர்வாழ்வு புனரமைப்புக்கென வரும் நிதி முழுவதும் மக்களிடம் சென்றடைய ஆவன செய்வதே சிறந்ததும் பாராட்டத்தக்கதும் ஆகும். மக்கள் வரவேற்கக் கூடியதும் அதுவே ஆகும்.

# செய்திக் கொத்து

## அன்பளிப்பு

தென்மராட்சி,ஜூன்12

சாவகச்சேரி ஆஸ்பத்திரி அபி விருத்திப் பணிக்கென வெளி நாட்டில் வசிக்கும் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த அ.சிவகுமார் என்பவர் 50ஆயிரம் ரூபாவை ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் அண்மையில் கையளித்தார். (ஒ-117)

★ ★ ★

## நாடகவிழா

தென்மராட்சி,ஜூன்12

தென்மராட்சிப் பிரதேச மகளிர் அபிவிருத்திச் சங்கங்களுக்கிடையிலான பெண்கள் உரிமைகள் பற்றிய நாடகவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நாடகவிழாவில் கைதடி மேற்கு, தென்மட்டுவில், சாவகச்சேரி நகர், மீசாலை மேற்கு, இடைக்குறிச்சி, கச்சாய் ஆகிய மகளிர் அபிவிருத்திச் சங்கங்களின் நாடகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன. (ஒ-117)

★ ★ ★

## கலந்துரையாடல்

வரணி,ஜூன்12

உள்ளூராட்சி வாரம் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10மணிக்கு கொடிகாமத்தில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் க.இராமச்சந்திரன் அறிவித்துள்ளார். (ஒ-10-170)

★ ★ ★

## மதிப்பீட்டுப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூன்12

நல்லூர் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான தொகை மதிப்பீட்டுப் பயிற்சி எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி எங்காங்கேயன் தெரிவித்துள்ளார். (ஒ-180)

★ ★ ★

## புனரமைப்பு

தென்மராட்சி,ஜூன்12

மீசாலை மேற்கு மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கக் கட்டடம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் 3 லட்சத்து 35 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. (117)

★ ★ ★

## பாடசாலைகள் தொடர்பான விசாரணை

யாழ மாவட்டத்தில் உள்ள இரு பாடசாலைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் பொருட்டு வடக்கு - கிழக்கு மாகாண சபை அதிகாரிகள் குழு ஒன்று கடந்த வாரம் யாழ். வந்தது.

இக்குழு இங்கு தங்கியிருந்து குறித்த பாடசாலைகள் சம்பந்தமான முறைப்பாடுகளை விசாரணை மேற்கொண்டு பதிவுசெய்து சென்றுள்ளது. (ஒ-85)

★ ★ ★

## நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஜூன்12

யுத்தத்தினால் சேதமடைந்த சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தினைப் புனரமைக்க 40லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இந்நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

★ ★ ★

## மலசலகூடம் அமைப்பு

வரணி,ஜூன்12

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வரணிப் பிரதேசத்தில் உள்ள மூன்று பாடசாலைகளுக்கு மலசலகூடங்கள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

வரணி மகாவித்தியாலயம், கரமலைக் குறிச்சி மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகியவற்றுக்கே இந்த வசதி செய்து கொடுக்கப்படவுள்ளது. (ஒ-10-170)

## சான்றுப் பொருள்கள்

தென்மராட்சி,ஜூன்12

கொடிகாமம் பொலீஸாரால் பல்வேறு வழக்குகளில் கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருள்கள் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன.

நெல்மூடைகள், பாத்திரங்கள், கதிரைகள், தொலைக்காட்சிப்பெட்டி, சைக்கிள்கள் போன்ற பொருள்களே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன. சில. ஆயுதங்களும் வெடிப்பொருள்களும் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

★ ★ ★

## கணனி நிலையம் திறப்பு

வடமராட்சி,ஜூன்12

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் கணனிப் பயிற்சி நிலையத்தை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இன்று வியாழக்கிழமை ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

மந்திகையில் அமைக்கப்பட்டுள்ள இக்கணனிப் பயிற்சி நிலையத்தின் ஆரம்ப வைபவம் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் எஸ்.அன்னலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஒ-173)

★ ★ ★

## பரிசளிப்பு

தென்மராட்சி,ஜூன்12

சரசாலை, நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய மஹோற்சவத்தை ஒட்டி சரசாலை இந்து மன்றத்தினரால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலயமுன்றிலில் பரிபாலன சபைத் தலைவர் க.சிவசங்கரநாதன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வழங்கப்படவுள்ளன. (ஒ-117)

★ ★ ★

## விசேட கருமபீடம்

சண்டிலிப்பாய்,ஜூன்12

இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளையினால் சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் ஆலய வீதியில் விசேட கருமபீடம் நடத்தப்படவுள்ளது.

இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் இக்கருமபீடத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஒ-10-135)

★ ★ ★

## வீதி விபத்து

கைதடி,ஜூன்12

வேகமாக வந்த மினிபஸ், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் சென்ற பெண்மணி மீது மோதிய சம்பவம் நாவற்குழி, செல்வநகரில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த திருமதி நவரத்தினம் தவமணி (வயது45) என்னும் குடும்பப் பெண்ணே படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-75)

★ ★ ★

## விற்பனைக்குதவாத அப்பிள்கள் அழிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன்12

குருநகர் சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த தரமற்ற ஒரு தொகுதி அப்பிள் பழங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பொதுச்சுகாதார பரிசோதகர்களால் அழிக்கப்பட்டதாக யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ஒ-10)

★ ★ ★

## கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு

மல்லாகம் நீதிமன்ற இல்ல இடம்பெயர்ந்தோர் முகாம் சூழலில் இன்று வியாழக்கிழமை கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பொதுமக்கள் இந்நடவடிக்கைக்கு ஒத்துழைக்கும் வகையில் தமது வளர்ப்பு நாய்களை இன்று கட்டி வைக்குமாறும், அல்லது நாய்களின் அனுமதித் தகட்டை அவற்றின் கழுத்தில் கட்டிவிடுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-??)

---

### மாகாண சபை மேற்கொண்டுவரும்

# புனரமைப்புப் பணிகளில் பாரபட்சம்; இதனைத் தடுக்க கட்டமைப்பு தேவை!

## தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்12

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற புனரமைப்பு பணிகளில் பாரபட்சம் காட்டப்படுகிறது. இதனை தவிர்ப்பதற்கு மாவட்ட ரீதியான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன்.

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் அவசர புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பூவண்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நிலவும் சமாதான சூழலைப் பயன்படுத்தி யுத்தத்தால் சீரழிந்து போயுள்ள எமது பிரதேசங்களை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கும் இப்பகுதியில் இயங்கும் அரச நிறுவனங்களுக்கும் உண்டு.

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் இன்று பல்வேறு புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இருந்த போதும் இந்த புனரமைப்புப் பணிகளின் போது மாவட்டத்திற்கு மாவட்டம் பாரபட்சம் காட்டப்படுகின்றது. இதனைத் தவிர்ப்பதற்காகவே மாவட்ட ரீதியான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டியுள்ளது. இவ்வாறானதொரு கட்டமைப்பு வடக்கு - கிழக்குப் பகுதிகளில் காணப்படாததாலேயே அமைச்சர்களும் தத்தமது அமைச்சுக்கு தொடர்பில்லாத வேலைத் திட்டங்களை மேற்கொள்கின்றனர். இதனால், எமது மக்களுக்கு பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை.

வடக்கு - கிழக்கில் மத்திய அமைச்சு, மாகாண அமைச்சு என்ற இரு பகுதிகள் இருப்பதனால் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது மிகவும் கடினமாகவுள்ளது இவ்விரண்டையும் ஒருங்கிணைத்துச் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் உள்ளோர் அரசியல் வாதிகளின் அபிலாஷைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படக்கூடாது. யுத்தத்தால் சீரழிந்த மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய வகையில் செயலாற்ற வேண்டும்.

தற்போது இழுபறி நிலையில் உள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுமானால் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கொள்கை ஒன்று உருவாக்கப்படும்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள வேலைத் திட்டங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு அது சார்ந்த நிர்வாகத்திடம் எந்தவிதமான கொள்கைத் திட்டங்களும் இல்லை. இதனால்தான் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்த நிலையில் கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி தற்போதுள்ள வடக்கு - கிழக்கு மாகாணசபை நிர்வாகத்தின் மூலம் புனரமைப்புத் திட்டங்களை செயற்படுத்த முடியாது. இதற்காகத்தான் கிடைக்கும் நிதியை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துகின்றோம் என்றார் பூவண்ணன்.

இக்கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாண உதவி சிரேஷ்ட செயலாளர் (திட்டமிடல்) வி.எஸ். சுவாமிநாதன், வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர் எஸ்.சுப்பிரமணிய சர்மா யாழ்மாவட்ட நிர்வாக சேவை துணைப் பொறுப்பாளர் விஜிதரன், யாழ்.மாவட்ட மேலதிக கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் மற்றும் யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி சிவபாலன், மாகாணசபை மற்றும் யாழ். செயலக உயர் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஒ-5)

# விவாதச் சுற்றுப் போட்டியில் பல்கலைக்கழக அணி வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூன்12

பேராதனைத் தமிழ் சங்கப் பவள விழாவையொட்டி அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட விவாதச் சுற்றுப்போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

கடந்த 7ஆம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம், ருஹுணு, ஜெயவர்த்தனபுர, கொழும்பு, பேராதனை, மொறட்டுவ மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகங்கள் பங்குபற்றின. இப்போட்டியில் பங்குபற்றிய யாழ்.பல்கலைக்கழக அணி அனைத்து சுற்றுகளிலும் வெற்றி பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக அணியில் கி.ஐங்கரன், க.ஜெசிதன், கு.கிரீசன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இப்போட்டியின் சிறந்த பேச்சாளராக யாழ்.பல்கலைக்கழக அணியின் தலைவர் கி.ஐங்கரன் தெரிவுசெய்யப்பட்டார். (ஒ-8)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 481 |
| திகதி | 10.06.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல.
4970324-4982246

வெற்றி இலக்கங்கள் 13 28 29 33

லக்கினம்

கும்பம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்பட்டது.



இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 266,988 | 10 | 2,669,880 |
| 2 இலக்கங்கள் | 24,455 | 20 | 489,100 |
| 1 இல + லக்கினம் | 24,261 | 30 | 727,830 |
| 2 இல + லக்கினம் | 2,278 | 100 | 227,800 |
| 3 இலக்கங்கள் | 657 | 500 | 328,500 |
| 3 இல + லக்கினம் | 55 | 5,000 | 275,000 |
| 4 இலக்கங்கள் | 02 | 100,000 | 200,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,000,000 | 1,000,000 |
| மொத்தம் | 318,697 | - | 5,918,110 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,918,110/-

தொடர் இல. 5959537க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஜூன் 13ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 36, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விற்பனைஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4971548-0-08
4971058-3-31
4977010-5-56
4980922-5-18
4974797-0-62

# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
13-12-1980

## சோதிநாதன் சோபநாத்



உதிர்வு
12.06.1999

எம் பாசமிகு சோபா!
பத்தொன்பதாம் பருவமதில் உதிர்வதற்கு
நீயென்ன பழுத்த பழமா?
விருட்சமாய் நீ விழுது விட்டு
வளர்வாயென
காத்திருந்தோம்
வேரிழந்து சரிந்தும் நீ போனதேனோ
எமைப்பிரிந்து?
ஆதரவாய் ஆற்றிடுவாயென
இருந்த எமை ஆறாத்துயரமதில்
ஆழ்த்தி எங்கு சென்றாயடா?
நான்காண்டுகள் போயிடினும் நாற்புறமும்
மறைந்திடினும் மறையாதடா
உன் நினைவு!

நிதமும் நாம் வேண்டுகின்றோம் நித்தியமும்
நீ இறை பதத்தில் இழைப்பாறிடவே!

*"தாயகம்"*
*சிவகுல வீதி,*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*

(19056)

உன்பிரிவால் வாடும்:
தாய், சகோதரர்கள்.

# அறிவித்தல்

## மரம், மணல் ஏல விற்பனை

22-06-2003 - மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், மல்லாகம்.

இந்நீதிமன்றில் 22-06-2003ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00மணிக்கு, மணல் மற்றும் மரக்குற்றிகள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளன என்பதை அறியத் தருவதோடு, இதனைப் பார்வையிட விரும்புவோர்கள் அன்று காலை (22.06.2003) 8.00மணி முதல் நீதிமன்ற வளாகத்தில் பார்வையிடலாம். மேலும் ஏல விற்பனையில் மணல், மரக்குற்றிகளை வாங்கியவர்கள் உடனே பணத்தைச் செலுத்துவதோடு, நீதிமன்ற வளவில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மன்றின் கட்டளைப்படி.
ம.செல்வரத்தினம்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

(C/28376)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு நீர் விநியோகம் சம்பந்தமான பொருள்கள்

## கூறுவிலை கோரல் - 2003

நீர் வேலைப் பகுதிக்குத் தேவையான நீர் இறைக்கும் இயந்திரம், பி.வி.சி குழாய்கள், பொருத்துக்கள் ஆகியவற்றை யாழ்ப்பாணம் மாநகர சபை களஞ்சியத்தில் விநியோகிப்பதற்கான கூறுவிலைகள் 24.6.2003 முற்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கூறுவிலைகளுக்கான படிவங்களை மாநகர சபை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும். தேவைப்படும் ஏனைய விபரங்களை மாநகர சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
11.06.2003

(C/28375)

## பகிரங்க ஏல விற்பனை

பண்டாரமாளிகை வளவில் உள்ள வெட்டப்பட்ட மரக்கிளைகள் எதிர்வரும் 17.06.2003 திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் பிணைப் பணமாக ரூபா50.00ஐ செலுத்த வேண்டும். ஏனைய விபரங்களை மாநகர சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

இ. இராமலிங்கம்
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C/28374)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா கிருஸ்ணன்

தோற்றம் -1941-07-25 மறைவு -2000-05-15

என்றும் உங்கள் நினைவுடன் வாடும்
- குடும்பத்தினர்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

(19050)

## மிதிவெடிகள் மீட்பு

சாவகச்சேரி பெருங்குளம் வயல் வெளிப்பகுதியில் தமது வயலை கொத்தித் துப்புரவு செய்த விவசாயி அந்த வயலில் கிடந்த 21மிதிவெடிகளை மீட்டார்.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இரு கட்டமாக இந்த மிதிவெடிகள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31-117)

## சிரமதானம்

சாவகச்சேரி,ஜூன்12

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் இன்று காலை சாவகச்சேரி நகர சபை ஊழியர்களால் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது. இப் பணியில் பொது மக்களும கலந்துகொள்ளவுள்ளனர் என நகர சபை செயலாளர் மு.செ.சரவணபவ தெரிவித்துள்ளார். (ஒ-31-117)

## பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரை

குறைந்த கட்டணத்தில் லேசர் பிரின்ரில் பிரதி செய்து பெற்றுக்கொள்ள முந்துங்கள் இன்னும் ஒரு சில ஓடர்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

STR
Communication & Computer Systems
81, Palaly Road, Kantharmadam, Jaffna

## தவறிவிட்டது

புலோலியைச் சேர்ந்த கதிர்காமு கனகராஜா என்பவருடைய தே.அ. அட்டை (இல. 570040669V), கண்டாவளை பாஸ் அடங்கிய பேர்ஸ் முகமாலைக்கும் கொடிகாமத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்

சிவகஜன் புத்தக நிலையம்
கண்டி வீதி, கொடிகாமம்,
070-21 3158, 0777-27 3607
எனும் முகவரியுடன்
தொடர்புகொள்ளவும்.

(19051)

## தேவை

கணவன், மனைவி இருவருக்கு மட்டும் உணவு தயாரிப்பதற்கும் உதவிகள் செய்வதற்கும வீட்டுப்பணிப்பெண் உடன் தேவை.

சம்பளம் நேரில் பேசலாம்.

தொடர்பு:
செல்லையா
இராசதுரை,
அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.

(19045)

## லஷ்சுமி சினிமா
இணுவில்



விஜய் சினேகா மற்றும் பலர் நடிப்பில்
வசீகரா
(ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

## நாகம்ஸ் சுன்னாகம்

சரத்குமார் (இருவேடம்) தேவயானி, ஆனந்தராஜ் நடித்த
சூரிய வம்சம் (ரீலஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பு.நே)
அடுத்த வெளியீடு 'கீதை'

## ராஜா யாழ்ப்பாணம்

இன்று மட்டும்
சிவாஜி, பத்மினி, பாலையா, நாகேஸ் நடித்த
தில்லானா மோகனாம்பாள்
2.30, 6.30 மட்டும் (ரீலஸ்)
THE ROCK THE SCORPION KING
காலை 10.30, இரவு 9.30 மட்டும்

(C/28324)

## லிபேட்டி அச்சுவேலி



அஜித், கிரண், மீனா, ரமேஷ்கண்ணா நடித்த
வில்லன்
(ரீலஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00
(புதிய நேரம்)

## நிறைஞ்சனாஸ்

விஜய், ஷாலினி, ராதாரவி நடித்த
காதலுக்கு மரியாதை
(ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
BEHIND ENEMY LINES

# ஆளும் தரப்பினர் தொடர்பாக வெளிநாட்டுத் தூதரிடம் முறைப்பாடு

ஆளும் கட்சியினர் ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதாக பொ.ஜ.முன்னணியினர் வெளிநாட்டு இராஜ தந்திரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அரசாங்க அச்சகம் மற்றும் செய்திகள் பிரசுரம் செய்யும் வேறு காரியாலயங்கள் தொடர்பில் ஆளும் கட்சி ஆதரவாளர்கள் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ் சாட்டி வருகின்றனர். இதற்கு பதில் நடவடிக்கையாக பொ.ஜ.மு.நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகமவின் தலைமையில் குழுவொன்று கொழும்பில் பிரிட்டிஷ் தூதரை சந்தித்து முறையிட்டது.

அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளின் தூதர்களையும் தாங்கள் சந்தித்து இது சம்பந்தமாக முறையிட உள்ளதாகவும் -

மேலும், சர்வதேச தொழிற்சங்கம் மற்றும் ஐ.நா.ஆகியவற்றிடமும் தற்போதைய நாட்டு நிலைமை குறித்து முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் - அமுனுகம தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 9ஆம் திகதி அரச அச்சகம் தாக்கப்பட்டமை, அண்மையில் 'லக்பிம' பத்திரிகைக் காரியாலயம் மற்றும் ஊழியர் மீதான தாக்குதல் ஆகியவை தொடர்பாகவே எதிர்க்கட்சிக்குழு வெளிநாட்டுத் தூதர்களிடம் முறையிட்டுள்ளது.

## அறிவித்தல்

சங்குவேலி தெற்கு மானிப்பாய்
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்

2003-06-14 ஆம் திகதி நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 2003-07-15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(19047)

நிர்வாக சபையினர்

## வாடிக்கையாளர்களுக்கு

✪ PANASONIC ✪ SANYO ✪ BPL
T.Vகளை இரண்டு வருட உத்தரவாதத்துடனும்
✪ LG ✪ SISIL
குளிர்சாதனப் பெட்டிகளை 5வருட உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ளலாம்.
✪SONY Radio ✪SONY TV
✪ NATIONAL Radio, Radio Cassatte, Vedio Deck
முதலியவற்றையும் சகல விதமான மின்சார வீட்டுப் பாவனைப்பொருள்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளவும். சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும் நாடவேண்டிய இடம்.

உத்தரவாதம் எம்மால் வழங்கப்படும்

V.K. இராசரத்தினம்,
95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(19054)

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## கிருஸ்ணசாமி செல்லம்மா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் தற்பொழுது வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமான திருமதி கிருஷ்ணசாமி செல்லம்மா 09-06-2003 நள்ளிரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் இளையபிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் அமரர் கிருஷ்ணசாமியாரின் அன்பு மனைவியும் தர்மகுலசிங்கம்(சுவிஸ்), தவரஞ்சினி, கிருபாகரன் (சுவிஸ்), பிரியதர்சினி (சுவிஸ்), றஜனி (ஜேர்மன்), சுதாகரன் (டென்மார்க்), தாரணி(சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும் அருந்ததி (சுவிஸ்), பேரின்பநாயகம், காமினி (சுவிஸ்), கமலநாதன்(சுவிஸ்), நடேசலிங்கம் (ஜேர்மனி), பத்மாவதி (டென்மார்க்), வரதராஜன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அன்னம்மா, நல்லம்மா, கனகம்மா, அமரர் பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தசாமி, அன்னலட்சுமி, இரத்தினசிங்கம், இராஜரத்தினம், இரத்தினம், சின்னத்துரை, சின்னராசா, செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் தர்சன், நிவிதன், அனிதன், பிரவீனா, காண்டீபன், பிரஷாந்தி, கஜந்தன், தனுஷா, ஆரபி, லயானி, யேனினி, ஷாலினி, சாலினி, குருஷோந், அபிர்ஷனா, செந்துஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*2B, சுவிசுத்தாராம றோட்,*
*W.A.சில்வா மாவத்த,*
*வெள்ளவத்தை.*

(19055)

தகவல்:
பே.தவரஞ்சினி (மீரா)
கஜந்தாஸ் Textile
நவீன சந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்.

## கணபதிப்பிள்ளை முத்துலிங்கம்

வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை முத்துலிங்கம் 10-06-2003 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பகவதியின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி, விமலேந்திரன (இந்தியா), காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பாலேந்திரன் (பிரபு - ஜேர்மனி), குலேந்திரன் (அப்பு - ஜேர்மனி), கனேஸ்வரி (இந்தியா), கேதீஸ்வரி(சசு - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லமுத்துவின் சகோதரனும் காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் இராஜேஸ்வரி, கணேசலிங்கம், பாக்கியலட்சுமி, கலா, செல்வன்(சைனுகா ஸ்ரோர்ஸ், கொழும்பு -11, 05ஆம் குறுக்குத்தெரு) ஆகியோரின் மாமனாரும் செல்வன், புவனா(சுவிஸ்), பூகுந்தன் வசா, சந்துரு, கௌதம்சௌபா, ராஸ்மி, ஜென்சி, ஜெனு, ஜெனி, ஜெனார்த்தனன், பானுசன், சிஜான், கௌசி, சினேகா, கஜீபன், கௌசிகன், கௌசன், சைனுகா, சிஜா, அபி ஆகியோரின் பேரனும் நிஷாந்த், திவ்யன், சிவஷாந்த் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(12-06-2003) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை கிழக்கு,*
*வேலணை.*

(19057)

தகவல்:
க.முகுந்தன்(பேரன்)

# பல்கலைக்கழகத்தில் நாளை சமகால அரசியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்12

'இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வும் உலகளாவிய சவாலும்' என்ற தலைப்பிலான சமகால அரசியல் கருத்தரங்கு ஒன்று நாளை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது.

பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இக் கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக சமூக அரசறிவியல் துறை விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம் மேற்படி தலைப்பில் உரையாற்றுவார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. (ஐ)

## தற்காலிக நிர்வாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், புலிகளோ ஆட்சிமுறையை முற்றாக மாற்றியமைக்கவேண்டும். அதற்கு அரசமைப்பை முழுதாக மாற்றவேண்டும். புதிய அரசமைப்பு மதச் சார்பற்றதாகவும் நியாயமானதாகவும் நீதியானதாகவும் பாரபட்சமற்றதாகவும் இருக்கவேண்டும். அது தமிழ் மக்களின் தாயகக் கொள்கையையும் அவர்களது சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கவேண்டும். இது ரணில் விக்கிரமசிங்கவின் பலமற்ற 'நோஞ்சான்' கூட்டரசினால் செய்யமுடியாத காரியம் என்பதை உணர்ந்துதான் எமது இயக்கம் இடைக்கால நிர்வாக அமைப்பைக் கொண்டுவரக் கேட்டது என்று புலிகளின் அறிக்கை கூறுகிறது.

இனப்பிரச்சினையில் வேற்றுநாட்டு சக்திகள் தேவையற்றமுறையில் தமது செல்வாக்கைச் செலுத்துவதற்கு விக்கிரமசிங்கவின் அரசு இடமளித்து, சமாதான முயற்சிகளைக் குழப்பமாக்கி வருகின்றது என்றும் புலிகள் தமது அறிக்கையில் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டு அரசியல் விவகாரம். பிரச்சினையில் சம்பந்தப்பட்டவர்களே அதைத் தீர்த்துக்கொள்ளவேண்டும்.

அரசின் பொருளாதார அரசியல் வங்குரோத்து நிலை கடைசியில் அரசை 'சர்வதேச பாதுகாப்பு வலைக்குள்' தஞ்சம் புக வைத்துவிட்டது. அதன்மூலம் நாட்டின் பொருளாதார அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசு முயல்கிறது. அப்படிச் செய்வதன்மூலம் மூன்றாம் தரப்பு அனுசரணையை வெளியிட்டு பயங்கர சக்திகளின் சர்வதேச மத்தியஸ்தமாக அரசு மாறிவிட்டது.

எதிர்காலத்தில் நாட்டுக்கு இதனால் ஏற்படக்கூடிய அரசியல் பொருளாதார விளைவுகள் மிகப் பாரதூரமானவையாகவே இருக்கும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

டோக்கியோ மாநாட்டுத் தீர்மானங்கள் மற்றும் பிரகடனங்கள் பற்றியும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அவை எதுவும் புலிகள் இயக்கத்தை கட்டுப்படுத்தமாட்டா.

ஏனெனில், புலிகள் இயக்கம் மாநாட்டில் கலந்துகொள்ளவும் இல்லை. தீர்மானங்கள், பிரகடனங்கள் ஆகியவற்றை உருவாகுவதில் பங்குவகிக்கவும் இல்லை. புலிகளுடன் கலந்தாலோசனைகள் நடத்தப்படவும் இல்லை. கொழும்பு அரசு அனுசரணையாளர்கள் மற்றும் தந்திரிகளான சர்வதேச கூட்டாளிகள் ஆகியோரின் பேருதவியுடன் தன்னுடைய நிலைப்பாட்டை புலிகள் மீது திணிப்பதற்கு இந்தத் தீர்மானங்களையும் பிரகடனங்களையும் உருவாக்கி ஆவனப்படுத்தி இருக்கிறது. இது எங்களுக்கு ஏற்புடையதல்ல என்று புலிகளின் அறிக்கையில் கடைசியாகக் கூறப்பட்டிருக்கிறது. (ஐ-4)

## டோக்கியோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் நம்புகிறோம். தமக்காகவும் தமது மக்களின் நன்மைக்காகவும் பேச்சு மேசைக்கு திரும்ப வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உள்ளது.

"ஆனால், எவ்வளவு விரைவில் அவர்கள் பேச்சு மேசைக்கு திரும்புவார்கள் என்பதை என்னால் வரையறை செய்யமுடியாது" - என்றார் அகாஷி. (ஐ-4)

## டாக்டர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல துன்பங்களை அனுபவிக்கும் நோயாளர்களின் நன்மை கருதியாவது வைத்தியர்கள் கடமைக்குத் திரும்ப வேண்டும்.

வைத்தியர்களின் நிலுவைகளைச் செலுத்துவதற்கு நூறு கோடி ரூபா தேவைப்படுகிறது. இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் புதனகிழமை தாக்கல் செய்யப்படவுள்ளது.

அதன்பின்னர் வைத்தியர்கள் 44 சதவீத சம்பள அதிகரிப்பை பெறுவார்கள். வடக்கு - கிழக்கில் பணியாற்றும் வைத்தியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்க அரசு கொள்கையளவில் இணங்கியிருக்கின்றது.

ஆனால், 10ஆயிரம் ரூபா கொடுப்பனவை கோருவது நியாயமற்றது. - இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் தயாரத்ன. (ஐ-4)


**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

பிரிவு – 3 By: S.B.SASI

ஆரம்பம் - 15.06.2003

NEW HARY'S INSTITUTE

சித்தன்கேணி (1934)


## இரண்டாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநோயாளர் பிரிவு உட்பட சகல கிளினிக்குகளும் மூடப்பட்டமையால் தூர இடங்களில் இருந்துவந்த நோயாளர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

இதேவேளை -

டாக்டர்களின் போராட்டம் காரணமாக வடமராட்சிப் பகுதி வைத்திய சேவைகள் பாதிக்கப்படமாட்டா என்று பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரைவேற்பிள்ளை தெரிவித்தார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தற்போது 63 நோயாளிகள் மட்டுமே வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வருகின்றனர். இந்தநிலையில், வைத்தியர் சங்க உத்தரவின் பேரில் இங்குள்ள வைத்தியர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தாலும், மனிதாபிமான அடிப்படையில் அத்தியாவசிய சிகிச்சைப் பிரிவில் மருத்துவர்கள் பணிபுரிவர் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-70-5-10-15)

## காரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரைக் காருக்கு வெளியே இழுத்து வானில் ஏற்றிக் கடத்திச் சென்றனர் என்றும் -

கடத்தப்பட்டவரின் மகன் விஜயகுமார் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சம்பவத்தின்போது இவர்கள் பயணஞ்செய்த கார் பலத்த சேதமடைந்துள்ளது. இந்த ஆள் கடத்தல் தொடர்பாக பருத்தித்துறையிலுள்ள பொலீஸ் நிலையத்திலும் வல்வெட்டித்துறையிலுள்ள புலிகளின் அரசியல் துறை அலுவலகத்திலும் முறையிடப்பட்டிருக்கிறது. (ஐ-70)

## திரையரங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் மாற்றுக் குழுக்களைச் சேர்ந்தவர்களைச் சுட்டுக்கொலை செய்யும் நோக்குடனேயே அப்பகுதிக்கு இவர்கள் சென்றுள்ளனர். தமது நோக்கம் நிறைவேறாத பட்சத்தில் மீண்டும் கொட்டாஞ்சேனை நோக்கித் திரும்பியுள்ளனர்.

'சய்னைட்' உட்கொண்டு களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள இளைஞர் தற்போது ஆபத்தான கட்டத்தை தாண்டிவிட்டார்.

கொட்டாஞ்சேனையில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோ இதற்கு முன்பும் இதுபோன்ற குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டிருப்பதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. ஓட்டோ சாரதி தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள ஒன்பது பேரும், எந்தச் சம்பவத்துடனும் தொடர்பில்லாதவர்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது. ஆகவே, அவர்களை உடன் விடுதலை செய்யவிருக்கிறோம்.

களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நபரைத் தவிர ஆட்டோ சாரதியும் மற்றைய நபரும் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவிருந்தனர் என தெமட்டகொட விசேட பொலீஸ் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-4)

# பிரதமரின் டோக்கியோ உரையை பொ.ஐ.முன்னணிக் குழு ஆராயும்

## ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்க

கொழும்பு,ஜூன்12

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க டோக்கியோ மாநாட்டில் நிகழ்த்திய உரையை ஆராய்வதற்கு பொ.ஐ. முன்னணி 7 பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்துள்ளது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் இந்தக் குழுவுக்கு தலைமை வகிக்கிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரமுகர்களான டி.எம்.ஜயரத்ன, மைத்திரிபால சேனநாயக்க, பீ.ஏ. குணசேகர, விஸ்ஸவிதான உட்பட 7 பேர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

பிரதமரின் டோக்கியோ உரையினை விரிவாக ஆராய்ந்து இந்தக் குழு ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என்று பொ.ஐ.முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-4)

# இலங்கையில் யுத்தத்தால் இதுவரை 20 ஆயிரம் பேர் காணாமற்போயினர்

மட்டக்களப்பு,ஜூன்12

கடந்தகால போரினால் இதுவரை இலங்கையில் 20 ஆயிரம் பேர் காணாமற்போயுள்ளனர். இவர்கள் தொடர்பான விசாரணைகளை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆரம்பிக்கவுள்ளது.

செஞ்சிலுவை சர்வதேச குழுவின் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான வதிவிடப்பிரதிநிதி பிலிப்பா றெக்றோமாக்கு வஸ்ற் இத்தகவலை வெளியிட்டார்.

1990 ஆம் ஆண்டின் பின்னர்தான அதிகளவானோர் காணாமற்போயுள்ளனர் எனவும்.

காணாமற் போனோரின் உறவினர்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களை திரட்டி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## உரும்பிராய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

உரும்பிராய் வடக்கில் இயங்கி வரும் இந்த சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் பாலியல் துஷ்பிரயோகம் நடைபெற்றுவருவதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி.சந்திரசேகரா யாழ்.நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தார். இதனைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட யாழ்.நீதிமன்ற நீதிவான், இச்சிறுவர் பராமரிப்பு நிலையம் தொடர்பாக விசாரணைசெய்து பூரண அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டிருந்தார். நேற்றுமுன்தினம் அச்சிறுவர் இல்லத்துக்குச் சென்று கோப்பாய் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அச்சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் உள்ள இரு பெண் பிள்ளைகள் தெரிவித்த முறைப்பாட்டுக்கு அமைய, அங்கு பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் நடைபெற்றுள்ளமை தெரியவந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கமைய, அந்நிலையத்தின் காவலாளியை பொலீஸார் கைது செய்தனர். இவரை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டனர் என்று கூறப்படும் இரு பெண் பிள்ளைகளையும் வைத்திய பரிசோதனைக்காக யாழ்.போதனாவைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்குமாறும் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ள நீதிவான், இச்சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் நிர்வாகியையும் பராமரிப்பு நிலையத்தின் கண்காணிப்பாளர், உதவிக் கண்காணிப்பாளர் மற்றும் அங்கு கற்பிக்கும் இரு ஆசிரியைகளையும் எதிர்வரும் 25 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறும் அவர்களுக்கு அறிவித்தல் அனுப்புமாறும் மன்றின் பதிவாளருக்குப் பணித்தார். (ஐ-8)


**COMPUTER COURSES**

Batch III June 14th 2003

Time: 10.00 a.m.

பிரிவு III இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மாணவர்களின் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

இயக்குநர், IIS, யாழ்ப்பாணம்.

(சி-28348)



**ஸ்ரார்கல்வி நிலையம் சுன்னாகம்**

A/L 2004,2005

புவியியல், கிறிஸ்தவ நாகரிகம் வகுப்புகள் நடைபெறுகின்றன.

புவியியல்: சனி, ஞாயிறு
10 a.m. - 11 a.m. - 2004
11 a.m. - 12 a.m. - 2005
By: I.S.ஜெகன

கிறிஸ்தவ நாகரிகம்: சனி, ஞாயிறு
2 p.m. - 3 p.m. - 2005
3 p.m. - 4 p.m. - 2004
By: கொலின்ஸ்

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

- நிர்வாகி.

(19013)



**சமகால அரசியல் கருத்தரங்கு**

விடயம்: இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வும் உலகளாவிய சவாலும் (ஒரு சமகாலப் பார்வை)

கருத்துரை வழங்குபவர்: K.T.கணேசலிங்கம் (விரிவுரையாளர், சமூக அரசறிவியல் துறை, யாழ்.பல்கலைக் கழகம்)

இடம்: கைலாசபதி கலையரங்கு

காலம்: நாளை (13.06.2003) வெள்ளிக்கிழமை.

நேரம்: பி.ப. 3.00 மணி (புதியநேரம்)

மேற்படி கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

(19053)



முற்றிலும் குளிரூட்டப்பட்ட வசதிகளுடன்

**அருள் கொமினிகேஷன்**

- வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகள் 10/-
- சவூதி, டோகா, கட்டார், லெபனான் 40/-
- தொலைத்தொடர்பு நிலையங்கள் மற்றும் வீடுகளுக்கான வெளிநாட்டு இணைப்புத் தொலைபேசி அழைப்புக்கள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிநாட்டு அழைப்புக்கு

ஒரு நிமிடம் இலவசம்

உடனே விஜயஞ்செய்யுங்கள்:

இல.1, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம். T.P. 3536

(19033)








... நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.